மாலை : 49 மணி : 12 டிசம்பர் 2007 விலை ரூ. 10

திருக்கோயில்

இந்து சமய அறநிலையத் துறை வெளியீடு

ஸ்ரீரங்கம் அருள்மிகு நம்பெருமாள்

ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்

வைகுண்ட ஏகாதசி மகோத்ஸவ அழைப்பிதழ்



108 திவ்ய தேசங்களில் முதன்மையானதும், பூலோக வைகுண்டம், பெரியகோயில் என்று அழைக்கப்படுகிற ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் நடைபெறும் அனைத்து உற்சவங்களுமே சிறப்பு வாய்ந்தவை ஆகும்.

பிரதி வருஷமும் மார்கழி மாதத்தில் நடைபெறும் திருஅத்யயன உற்சவம் (வைகுண்ட ஏகாதசி, திருமொழி, திருவாய்மொழித் திருநாட்கள்) முக்கிய திருவிழா ஆகும்.

பகல் பத்து, இராப்பத்து 'இயற்பா' என்று 21 நாட்கள் நடைபெறும். இந்த உற்சவத்தில் பகல் பத்தின் போது நம்பெருமாள் அர்ச்சுன மண்டபத்திலும். ராப்பத்து திருநாளில் திருமாமணி மண்டபத்திலும் (ஆயிரங்கால் மண்டபம்), எல்லா ஆழ்வார்கள், ஆச்சாரியர்களுடன் எழுந்தருளிச் சேவை சாதிப்பது மிகவும் சிறப்பாகும்.

பகல் பத்தின் போது திருமொழிப் பாசுரங்களும், இராப்பத்தில் திருவாய்மொழிப் பாசுரங்களும் அபிநயங்களுடன் அரையர்களால் சேவிக்கப்படும். பகல்பத்து திருநாளில், பத்தாம் நாள் நம்பெருமாள் மோகினி அலங்காரத்துடனும், வைகுண்ட ஏகாதசி அன்று நம்பெருமாள் ரத்ன அங்கியுடனும், மூலவர் முத்தங்கியுடனும் சேவை சாதிப்பார்கள்.

வைகுண்ட ஏகாதசியன்று காலை நம்பெருமாள் பரமபதவாசல் வழியே வந்து திருமாமணி மண்டபத்தில் எழுந்தருளுவார். இராப்பத்து எட்டாம் திருநாளில், நம்பெருமாள் குதிரை வாகனத்தில் எழுந்தருளி வேடுபறி கண்டருளுவார். இராப்பத்துச் சாற்று முறையன்று நடைபெறும் நம்மாழ்வார் மோட்சம் சேவிப்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாகும். இந்த உற்சவம் நாலாயிர திவ்யப் பிரபந்தத்திற்கும். ஆழ்வார்களுக்கும் ஏற்றமிகு உற்சவமாகித் திருமங்கையாழ்வார் காலம் தொடங்கி நடைபெற்று வருகின்றது.

இந்த உற்சவத்திற்கு அனைவரும் பெருந்திரளாக வந்திருந்து நம்பெருமாளைச் சேவித்து அருள்பெறும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நடப்பு 1417ம் பசலியில் வைகுண்ட ஏகாதசி திருவிழா 9-12-2007 துவங்கி 31-12-2007 முடிவடைகிறது.

வைகுண்ட ஏகாதசி முக்கிய திருவிழாக்கள்

09-12-2007	-	திருநெடுந்தாண்டகம்
10-12-2007	-	பகல்பத்து முதல் திருநாள்
19-12-2007	-	மோகினி அலங்காரம்
20-12-2007	-	வைகுண்ட ஏகாதசி பரமபதவாசல் (திருவாசல்) திறப்பு அதிகாலை 5.15 மணி
26-12-2007	-	திருக்கைத்தல சேவை
27-12-2007	-	வேடுபறி
30-12-2007	-	ஆழ்வார் மோட்சம்

குறிப்பு : இத்திருக்கோயிலின் "நித்திய ஆராதனை கட்டளைத்" திட்டத்தில் நிரந்தரக்கட்டளை ஏற்படுத்துபவர்களுக்கு முதலீடு செய்வதற்காகத் தாங்கள் செலுத்தும் தொகைக்கு மத்திய அரசின் வருமானவரிச்சட்டம் பிரிவு 80ஜி - ன் கீழ் வருமான வரி விலக்குச் சலுகை உண்டு.

இத்திருக்கோயில் "அன்னதானத்திட்டத்தில்" தினமும் மதியம் 12.15 மணிக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது. ஒரு நாள் செலவுத் தொகை ரூ. 2500/- நிரந்தர அன்னதானத் திட்டத்திற்கு ரூ. 30,000/- செலுத்துபவர்களுக்கு வருமானவரி விலக்கு உண்டு.

இவண்

திருக்கோயில் நிர்வாகம்

திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு | ஆண்டு 2038 மணி 12 | ஸர்வஜித்-மார்கழி டிசம்பர் 2007

அன்பார்ந்த வாசகப்பெருமக்களே!

"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடும்தொழிலன் நந்தகோ பன்குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாராயணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்"

- ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவை

பதஞ்சலி முனிவருக்கும், வியாக்கிரபாத முனிவருக்கும் தன் "ஆனந்தக் கூத்தினை" சிவபெருமான் ஆடிக்காட்டிய "ஆதிரைத் திருநாளும்", அரங்கனுக்குகந்த "வைகுண்ட ஏகாதசித் திருநாளும்" பரிணமிக்கும் திங்கள் மார்கழித் திங்கள்.

வைகறையில் துயிலெழுந்து, நீராடி திருக்கோயில்களுக்குச் சென்று ஞாயிறு உதிக்கும் முன் வீடு திரும்பும், பாவையர் நோன்பிருக்கும் திங்கள் மார்கழித் திங்கள். இப்பண்பாடு இன்று நேற்றல்ல நம் தமிழ் மண்ணின் பாவையருடன் தொன்று தொட்டு இயைந்தோடியிருக்கும் பண்பாட்டுக் கருவூலம். இம்மார்கழி நீராடல் குறித்து சூடிக்கொடுத்த சுடர்க்கொடி "ஆண்டாள் நாச்சியார்" தமது திருப்பாவையிலும், "மாணிக்க வாசகப் பெருமான்" தமது திருவெம்பாவையிலும் அருளிச் செய்துள்ள பாக்கள், சைவ வைணவ நல்லுலகிற்கு வழங்கியுள்ள அற்புதப் பாக்களாகும்.

திருமாலின் பாஞ்சஜன்யம் போன்ற சங்கொலிகளும், பக்தர்கள் பல்லாண்டு பாடும் ஒலிகளும், நிறைந்த இத்திங்களில் வைகறையில் துயிலெழுந்து, நீராடி திருக்கோயில்களுக்குச் சென்று "ஆனந்தக் கூத்தனை", "மாயவனை", "கேசவனை" இவ்வையகம் வளம் பெற வணங்கிடுவோம் வாரீர்!

பரம்பொருளின்பால் அசையாத பற்றும், இறையடியார்கள்பால் கலையாத பேரன்பும், தாம் ஏற்றுப்போற்றும் கொள்கைக்காக தன் இன்னுயிரையும் விடும் துணிவும் கொண்ட அடியார் பெருமக்களின் மாண்புகளை, சேக்கிழார் பெருமானார் பெரியபுராணத்தில் எடுத்து இயம்பியுள்ள சிறப்புக்களை "சேக்கிழார் பெருமானின் சிந்தனைகள்" எனும் தலைப்பில் வழங்கியுள்ளார் முனைவர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.

சிவத்தின் அருளால் நாம் சிவமயம் ஆகலாம், அவனோடு கலந்து பேரின்பம் அடையலாம். சிவனருளைப் பெறுவதற்குரிய வழிகளைக் கூறும் சாத்திரமே திருமந்திரம் என திருமந்திரச்சிறப்புக்களை "திருமூலரின் சிவயோக நெறி" எனும் தலைப்பில் வடித்துத் தந்துள்ளார் டாக்டர் திருமதி. இராதா தியாகராஜன் அவர்கள்.

இறைவனை மெய்யன்புடன் உள்ளம் குழைந்து உருகி மலரிட்டு அருச்சனை செய்து வழிபட்டால் பிறவி நோய் தீரும் என்ற அருண்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் சிவரகசியம், அவரது நினைவலைகளாக இவ்விதழில் வழங்கப்பட்டுள்ளது.

இறைவனைப் பூசித்து பேறு பெற்ற பறவைகளையும், விலங்குகளையும் தொகுத்து "பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் அருள் செய்த பரமனே எமக்கும் அருள் செய்வாய்" எனும் தலைப்பில் வழங்கியுள்ளார் பூசை.ச. ஆட்சிலிங்கம் அவர்கள்.

ஸ்ரீமத் நாராயணனுக்கு பகவத் தொண்டு செய்த அனந்தாழ்வானின் நிலைகளை அடுக்கடுக்காக தொகுத்து முனைவர் ஏ. பரந்தாம ராமானுஜதாசர் அவர்களும் பரசுராமரும், இராமபிரானும் சந்தித்த அற்புதக் காட்சிதனை ஆழ்வார் பெருமக்கள் எவ்வாறெல்லாம் அருளிச் செய்துள்ளனர் என்பதை பாச்சுடர் வளவ. துரையன் அவர்களும், "பரமனடிபாடும் பாவையர் நோன்பு" எனும் தலைப்பில் திருவெம்பாவையின் சிறப்புக்களைத் தமிழாகரர் தெ. முருகசாமி அவர்களும் இவ்விதழில் வழங்கியுள்ளனர்.

டாக்டர் சரசுவதி இராமநாதன் அவர்களின் கந்தரனுபூதித் தொடரும், கலைமாமணி முனைவர் செல்வக்கணபதி அவர்களின் "சைவமும் தமிழும்" தொடரும், தொடர்ந்து வந்துள்ளன. "உலகம் உய்ய உதித்த உடையவர்" எனும் தலைப்பில் ஸ்ரீராமானுஜரின் சிறப்புக்களை பெ. இராமநாதபிள்ளை அவர்கள் தொடராக இவ்விதழில் தொடங்கியுள்ளார்.

கோயம்புத்தூர், அருள்மிகு தண்டு மாரியம்மன் திருக்கோயில், பரக்கலக்கோட்டை, அருள்மிகு மத்யபுரீஸ்வரர் திருக்கோயில் மற்றும் மயிலம், அருள்மிகு முருகன் திருக்கோயில் சிறப்புக்கள் திருத்தல உலாக்களாக இவ்விதழில் வெளிவந்துள்ளன. அனைவரும் இதழினைப் படித்து மகிழ்ந்திட அன்புடன் வேண்டுகிறேன்.

அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.,)
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்

இந்து சமய அறநிலையத் துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.

குறளோவியம்

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு உலகப்பொது ஞாயிறு எனத்தக்க வகையில் ஒளியுமிழ்ந்து தோன்றியது திருக்குறள். அந்தக் குறளுக்கு நான் ஓவிய உரை தீட்டிடும் இந்நாள், மக்கள் வாழ்வுடன் ஒன்றியிருக்கும் எத்தனையோ நிலைமைகளை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே வள்ளுவரால் ஆராய்ந்து அறிவிக்கப்பட்டுள்ளன என்பதை எண்ணும்போது வியப்பே மேலிடுகிறது.

இந்நாள் ஒரு மருத்துவமனைக்குச் செல்வதாகக் கற்பனை செய்துகொள்வோம். அங்கே ஒரு அறையில் நமக்கு நண்பரோ அல்லது உறவினரோ நோயுற்றுப் படுத்திருக்கிறார். அவர் படுத்திருக்கும் அறைக்குள் நுழைகிறோம். ஆங்கில மொழியில் 'டாக்டர்' எனப்படும். மருத்துவர் நோயுற்றவரைப் பரிசோதித்துக் கொண்டிருக்கிறார். நாம் சற்று தொலைவில் நின்று கவனிக்கிறோம்.

பரிசோதனை முடிந்தபிறகு அருகே நிற்கும் 'நர்ஸ்' என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் செவிலியரை மருத்துவர் நெருங்கி அவர் காதில் மட்டும் கேட்கும்படியாக ஏதோ சொல்கிறார். செவிலியர், சில மருந்து புட்டிகளையும், மாத்திரைகளையும் மருத்துவரிடம் காட்டுகிறார். பிறகு, மருத்துவர் போய் விடுகிறார். செவிலியர், நோயுற்றவரை மெதுவாகத் தூக்கி, அவரது வாயில் ஒரு மாத்திரையை போட்டுச் சிறிது தண்ணீரையும் கொடுக்கிறார்.

எத்தகைய நோய் எனினும் நோயுற்றவர். மருத்துவர் மருந்து உடனிருந்து மருந்தளிப்பவர் என்ற அடிப்படையான இந்த நான்கு கூறுகளை உடையதாகவே இருக்கும் மருத்துவ முறை!

அதை இந்தக் காலத்திலே காணுகிறோம். இந்த அடிப்படையான பாகுபாட்டினைக் கொண்டதுதான் மருத்துவ முறையாகும் என்ற விளக்கத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, குறள் தந்திருக்கிறது.

"உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து."

உற்றவன் என்பது நோயுற்றவரையும், தீர்ப்பான் என்பது மருத்துவரையும் மருந்து என்பது நோய்க்கேற்ற மருந்தையும், உழைச்செல்வான் என்பது உதவியாக அருகில் இருப்பவர் என்பதையும் குறிப்பிடுவதோடு. இந்த நான்கு அடிப்படைக் கூறுகளே மருந்து எனப்படும் மருத்துவ முறையென்றும் வகுத்துச் சொல்லுகிறது வள்ளுவம்!

அளவுக்கு மீறி உண்ணாமல் இருந்தாலே பெரும்பாலான நோய்களைத் தடுத்துவிட முடியம் என்பதை எத்துணை நயமாகவும் தெளிவாகவும் தீர்க்கமாகவும் குறளார் கூறுகிறார் தெரியுமா?

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்."

முதலில் அருந்திய உணவு செரித்துவிட்டதா என்பதை உணர்ந்து அப்படிச் செரித்து இருந்தால் அதற்குப்பிறகு தக்க அளவு உண்டால்: அத்தகைய வழக்கதைக் கடைப்பிடிப்பவரின் உடம்பிற்கு மருந்து என ஒன்று வேண்டியதில்லை என்பது இதன் பொருள்.

நோய் தீர்ப்பதற்கு எந்த வழியைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறாரோ: அந்தவழி சமுதாயத்தில் ஏற்படுகிற பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் ஏற்ற வழியாக அமைந்திருக்கிறது!

கிளர்ச்சிகள், வன்முறைகள், போராட்டங்கள், அடக்குமுறைகள், இப்படி நாளுக்கு நாள் வளர்ந்து வரும் நிலைமைகளையும் மேலெழுந்தவாரியாக ஆராய்ந்து முடிவெடுப்பதில் பயனில்லை அல்லவா?

நோயின் அடையாளங்களை வெளித் தோற்றத்தால் மட்டும் கண்டுபிடித்துச் சிகிச்சையளித்துப் பயனில்லை.

நோய் இன்னதென்று ஆராய்ந்து, அந்த நோய்க்கான காரணங்களையும் ஆராய்ந்து அதனைத் தணிக்கும் வழியையும் ஆராய்ந்து பொருத்தமான சிகிச்சை: அதாவது நோயுற்றவரின் உடலுக்கேற்றவாறு சிகிச்சை அளிக்க வேண்டுமென்கிறார் வள்ளுவர்.

இது உடல் நோய்க்கு மட்டுமல்ல: மனித சமுதாயத்தில் எழுகிற எல்லாவிதப் பிரச்சினைகளுக்கும் பொருந்துகிற குறள் அல்லவா?

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

அதிகாரம் : 95 மருந்து பாடல்கள் : 950, 942, 948



மாண்புமிகு முதல்வர்
டாக்டர் கலைஞர்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.

இதழின் உள்ளே

1. அருள்மிகு தாயார் 108 போற்றிகள் - 4
2. சேக்கிழார் பெருமானின் சிந்தனைகள் முனைவர் திரு. எஸ். ஈஸ்வரன் - 6
3. திருமூலரின் சிவயோக நெறி டாக்டர் திருமதி. இராதா தியாகராஜன் - 9
4. உலகம் உய்ய உதித்த உடையவர் பெ. இராமநாதபிள்ளை - 11
5. தமிழாய்ந்த ஆங்கில அதிகாரி இரா. இரகுநாதன் - 13
6. பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் அருள் செய்த பரமனே எமக்கும் அருள் செய்வாய் பூசை ச. ஆட்சிலிங்கம் - 15
7. தண்டு மாரியம்மன் திருக்கோயில் கோவை - 17
8. பொது ஆவுடையார் திருக்கோயில் பரக்கலக்கோட்டை - 21
9. இறைவழிபாடு - அருண்மொழியரசு திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள் (நினைவலைகள்) - 23
10. பரமனடி பாடும் பாவையர் நோன்பு தமிழாகரர் தெ. முருகசாமி - 25
11. அனந்தாழ்வான் (அரவரசன்) முனைவர் த. பரந்தாம ராமானுஜதாசன் - 28
12. வேலும் மயிலும் துணை கந்தரனுபூதித் தொடர் டாக்டர். சரசுவதி இராமநாதன் - 31
13. அவதாரங்களின் சந்திப்பு பாச்சுடர் வளவ. துரையன் - 34
14. சைவமும் தமிழும் கலைமாமணி முனைவர் செந்தமிழ் வாரிதி இரா. செல்வக்கணபதி - 36
15. மனக்குறை போக்கும் மயிலம் முருகன் - 37

அருள்மிகு தாயார் போற்றி

108 போற்றிகள்



1. ஓம் அஞ்சிலைவல்லியே போற்றி
2. ஓம் அநந்தநாயகியே போற்றி
3. ஓம் அபிடேகவல்லியே போற்றி
4. ஓம் அம்புயவல்லியே போற்றி
5. ஓம் அமுதகடவல்லியே போற்றி
6. ஓம் அமுதவல்லியே போற்றி
7. ஓம் அரங்கநாயகியே போற்றி
8. ஓம் அரவிந்தவல்லியே போற்றி
9. ஓம் அரிலக்குமியே போற்றி
10. ஓம் அலர்மேல்மங்கையே போற்றி
11. ஓம் அழகியவல்லியே போற்றி
12. ஓம் அன்னநாயகியே போற்றி
13. ஓம் அன்னையே போற்றி
14. ஓம் ஆதிநாதவல்லியே போற்றி
15. ஓம் இந்திரையே போற்றி
16. ஓம் இலக்குமிநாச்சியே போற்றி
17. ஓம் இரமாமணியே போற்றி
18. ஓம் இறைவியே போற்றி

19. ஓம் உய்யவந்தவளே போற்றி
20. ஓம் உருப்பிணி நங்கையே போற்றி
21. ஓம் உலகநாயகியே போற்றி
22. ஓம் உறையூர்நாச்சியே போற்றி
23. ஓம் என்னைப் பெற்றதாயே போற்றி
24. ஓம் ஒண்டொடியாளே போற்றி
25. ஓம் கடல் மகளே போற்றி
25. ஓம் கண்ணபுரநாயகியே போற்றி
27. ஓம் கலியாணவல்லியே போற்றி
28. ஓம் கருந்தடங்கண்ணியே போற்றி
29. ஓம் கலைவாணியே போற்றி
30. ஓம் கற்பகவல்லியே போற்றி
31. ஓம் கனகவல்லியே போற்றி
32. ஓம் காடுறைவல்லியே போற்றி
33. ஓம் குலமாமகளே போற்றி
34. கும் குழைக்காதுவல்லியே போற்றி
35. ஓம் குழந்தைவல்லியே போற்றி
36. ஓம் குறுங்குடிவல்லியே போற்றி
37. ஓம் கோதைநாச்சியே போற்றி
38. ஓம் கோமளவல்லியே போற்றி
39. ஓம் கோளூர்வல்லியே போற்றி
40. ஓம் சண்பகவல்லியே போற்றி
41. ஓம் சத்தியபாமையே போற்றி
42. ஓம் சானகியே போற்றி
43. ஓம் சாரநாயகியே போற்றி
44. ஓம் சீதையே போற்றி
45. ஓம் சீவரமங்கையே போற்றி
46. ஓம் சுடர்க்கொடியே போற்றி
47. ஓம் சுந்தரவல்லியே போற்றி
48. ஓம் செங்கமலவல்லியே போற்றி
49. ஓம் செல்வத் திருக்கொழுந்தே போற்றி
50. ஓம் செல்வியே போற்றி
51. ஓம் சௌந்தரிய வல்லியே போற்றி
52. ஓம் தஞ்சைநாயகியே போற்றி
53. ஓம் தடங்கண்ணியே போற்றி
54. ஓம் தலைச் சங்கத் தமிழே போற்றி
55. ஓம் திங்கள் வினைதீர்த்த திருவே போற்றி
56. ஓம் திருமாமகளே போற்றி
57. ஓம் திருவே போற்றி
58. ஓம் தேவியே போற்றி
59. ஓம் நங்கையே போற்றி
60. ஓம் நப்பின்னையே போற்றி
61. ஓம் நம்பிக்கை நாச்சியே போற்றி
62. ஓம் நிலமங்கைவல்லியே போற்றி
63. ஓம் பங்கயச் செல்வியே போற்றி
64. ஓம் பத்மாசன நாச்சியே போற்றி
65. ஓம் பத்மாமணி நாச்சியே போற்றி
66. ஓம் பரிமளவல்லியே போற்றி
67. ஓம் பவளவல்லியே போற்றி
68. ஓம் பால்மொழியே போற்றி
69. ஓம் பாவையே போற்றி
70. ஓம் புருடோத்தமநாயகியே போற்றி
71. ஓம் புளிங்குடிவல்லியே போற்றி
72. ஓம் பூங்கோவல் நாச்சியே போற்றி
73. ஓம் பூமகளே போற்றி
74. ஓம் பூமிதேவியே போற்றி
75. ஓம் பூர்வா தேவியே போற்றி
76. ஓம் பூவார் திருமகள் நாச்சியே போற்றி
77. ஓம் பெண்கனியே போற்றி
78. ஓம் பெண்மைக் காப்பே போற்றி
79. ஓம் பெரிய பிராட்டியே போற்றி
80. ஓம் பெருஞ்செல்வ நாயகியே போற்றி
81. ஓம் பெருந்தேவியே போற்றி
82. ஓம் பொற்கொடி நாச்சியே போற்றி
83. ஓம் பொற்றாமரையாளே போற்றி
84. ஓம் பொன்னே போற்றி
85. ஓம் மட்டவிழும் குழலியே போற்றி
86. ஓம் மடவரல்மங்கையே போற்றி
87. ஓம் மணமகளே போற்றி
88. ஓம் மதுரவேணியே போற்றி
89. ஓம் மரகதவல்லியே போற்றி
90. ஓம் மலர்க்கிழத்தியே போற்றி
91. ஓம் மலர்க்குழலியே போற்றி
92. ஓம் மாசறுமணியே போற்றி
93. ஓம் மாயா தேவியே போற்றி
94. ஓம் மிதிலைச் செல்வியே போற்றி
95. ஓம் மெல்லியலே போற்றி
96. ஓம் மென்னோக்கியே போற்றி
97. ஓம் மேகவல்லியே போற்றி
98. ஓம் மையகண்ணியே போற்றி
99. ஓம் மோகூர்வல்லியே போற்றி
100. ஓம் வகுளவல்லியே போற்றி
101. ஓம் வாசலக்குமியே போற்றி
102. ஓம் வேள்விப் பொருளே போற்றி
103. ஓம் விமலையே போற்றி
104. ஓம் வித்துவக்கோட்டு வல்லியே போற்றி
105. ஓம வேதவல்லியே போற்றி
106. ஓம் வேளுக்கைவல்லியே போற்றி
107. ஓம் வைகுந்தவல்லியே போற்றி
108. ஓம் வைதேவியே போற்றி போற்றி

நிறைவாக, அந்தந்த திருத்தலத்திற்குரிய தாயார் பாடலை ஓதி, போற்றியை நிறைவு செய்யலாம்.

சேக்கிழார் பெருமானின் சிந்தனைகள்

சேக்கிழார் என்னும் சைவப்பெருமானால் 12ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது பெரியபுராணம். அருண்மொழித்தேவர் என்னும் இயற்பெயரையும் அமைச்சராய் இருந்த காலத்து **'உத்தமசோழப்பல்லவன்'** என்ற பட்டத்தையும், பெரியபுராணம் பாடிய பின்னர்த் **'தொண்டர்சீர்பரவுவார்'** என்னும் பட்டத்தையும் பெற்றுத் திகழ்ந்தவர் சேக்கிழார்பெருமான்.

நம்பியாண்டார்நம்பியின் திருத்தொண்டத் தொகையை ஆதாரமாக வைத்து பெரியபுராணத்தை இயற்றினார். திருத்தொண்டர்புராணம் என்றும் பெரியபுராணத்தை அழைப்பர். 63 நாயன்மார்களின் - சைவ அடியார்களின் வரலாறுகளைக் கற்பனைத் திறத்துடனும், வரலாற்றுச் சிறப்புடனும், காப்பிய நயத்துடனும் பெரியபுராணத்தைப் பாடியவர் சேக்கிழார்.

தேவாரப்பாடல்களில் பொதிந்திருக்கும் சைவக் கருத்துக்களை எல்லாம் கல்லாரும் கற்றுணரும்படி எளிமையாகக் கூறியுள்ளதால் பெரியபுராணத்தை 12ஆம் திருமுறை எனச் சைவத்திருமுறைகளில் ஒன்றாகச் சேர்த்திருக்கின்றனர். சேக்கிழார் பெருமானின் உள்ளத் தூய்மையும், பக்திப் பெருமையுமே ஒரு நூலாக வடித்தெடுத்தாற் போலப் பெரியபுராணம் திகழ்கிறது. பக்திச்சுவை 'நனிசொட்டச்சொட்டப் பாடிய கவி வலவ' என சேக்கிழாரை மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை பாராட்டுகிறார்.

அடியவர்களின் வரலாறுகளையெல்லாம் நேரில் கண்டும் பழகியும் அனுபவ முதிர்ச்சியுடன் இறைவனே **'உலகெல்லாம்'** என அடியெடுத்துக் கொடுக்கப் பெரியபுராணத்தைப் பாடியவர் சேக்கிழார் பெருமான்.

பரம்பொருளின்பால் அசையாதபற்றும், இறை அடியார் பால் கலையாத பேரன்பும் கொண்ட நாயன்மார்களின் வரலாற்றை உணர்த்தும் பெரியபுராணத்தைத் தந்தவர் சேக்கிழார் பெருமான்.

இறைவனை அகமனத்தால் உருகிப் பணிந்து பக்தி செய்தல் வேண்டும். உலகியல் அன்பு, உடல் தழுவலால் நிகழ, அருளியல் உலகில் உள்ளத் தழுவலே உண்மை பக்தி என்பதைத் 'தம்பிரான் உள்ளம் தழீஇயவன்' எனக் குறிப்பிடுகிறார் சேக்கிழார் பெருமான்.

வெறும் வாய்ச்சொற்களைப் பேசாமல் செயற்பாடு உடையவர்களாக இருத்தலே சிறப்பாகும் என்பதை 'வித்தகம் பேச வேண்டாம் பணிசெய வேண்டும் என்கிறார் சேக்கிழார் பெருமான். உள்ளம் தொண்டின் இருப்பிடம். உடல் தொண்டின் பிறப்பிடம். உடம்பாலும் உள்ளத்தாலும் தன்னலமின்றி இயற்றும் தொண்டின் சிறப்பையும், நட்பின் உயர்ச்சியினையும், கற்பின்மாண்பினையும், மகளிர்மேன்மையினையும் திறம்பட உரைத்தவர் சேக்கிழார் பெருந்தகை.

தொண்டு இருவகை, ஒன்று கருத்தால் செய்வது, மற்றொன்று கரத்தால் செய்வது. இவ்விரண்டும் கலந்த திருத்தொண்டு புரிந்தவர்கள் சைவ அடியார்கள்.

வயலில் விளைந்து அசையும் செங்கதிர்கள் அடியார்களின் மலர்ந்த முகம் போலவும், முற்றிய கதிர்கள் வளைந்து நிற்பது அடியார்கள்

ஒருவரையொருவர் வணங்குவது போலவும் இருப்பதாகச் சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகிறார்.

"காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம்
குழைக் கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம்
நெருங்குவளை"

என சேக்கிழார்பெருமானின் வருணனைகள் பெரும்பாலும் இயற்கையில் முகிழ்ந்தவை.

சுந்தரமூர்த்திநாயனார் 'இந்நூலின் தலைவர்'. இவர் வாயிலாகக் காதலையும் பக்தி கலந்து சிறப்பாக வெளிப்படுத்தி உள்ளார் சேக்கிழார்பெருமான்.

பரவைநாச்சியாரைத் திருவாரூரில் கண்ட சுந்தரர்,

'கற்பகத்தின் பூங்கொம்போ? காமன்றன்
பெருவாழ்வோ?
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ
புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்
கொடியோ?
அற்புதமோ? சிவனருளோ? அறியேனென்று
அதிசயத்தார்'

தெரியாமல் செய்தாலும் தெரிந்து செய்தாலும் செய்த தவறுக்குத் தண்டனை உறுதி என்பது ஆன்றோர் வாக்கு. சுந்தரமூர்த்தி **'எண்ணாத பிழை பொறுத்திங்கு யான் காண எழில் வள வண்ணா! கண்ணளித்து அருள்வாய்'** - என வேண்டுவது, தவறை உணர்ந்து திருந்த இறைவனை வேண்ட வேண்டும் என்ற சேக்கிழாரின் சிந்தனையை அறியலாம்.

ஆண்டிலும் அனுபவத்திலும் முதிர்ந்த சிவப்பழமாகிய திருநாவுக்கரசரைப் பெயர் சொல்லி அழைப்பதா? என திருநாவுக்கரசரைத் தந்தை நிலையில் வைத்து ஞானசம்பந்தர், அப்பரே என அழைக்கிறார். தமிழ் மொழிக்குச் சிறந்த சொல் ஒன்றைத் தருகிறார் சேக்கிழார்பெருமான்.

முத்தநாதன் என்பவன் சிவனடியார் போல வேடமிட்டு மெய்ப்பொருள் நாயனாரைச் சுரிகையில் குத்திக் கொன்றான். 'கொன்றான்' என்னாது **'தான் முன் நினைத்த அப்பரிசே செய்'** - என்கிறார். **'பரி'** என்ற சொல்லைப் பாதகச் செயலுக்குப் பயன்படுத்தியுள்ளார்.

அப்பூதியடிகள் மகனை அரவு தீண்டியதால் அவனைப் பாயினில் சுற்றி, ஒருபுறம் வைத்துவிட்டு நாவரசர்க்கு விருந்திட முனைந்தனர் அப்பூதியடிகள் குடும்பத்தினர். அம்மகனுக்கும் விபூதி தருவதற்காக அப்பர் அழைக்கிறார். அப்போது இறப்புச் செய்தியினைக் குறிப்பிடாது, அப்பூதியடிகள் **'இப்போதிங்கவன் உதவான்'** என்றார் நாகரிகமாக! கொலை முதலிய அமங்கலச் சொற்களை மறந்தும் பெரியபுராணத்தில் குறிப்பிடாதவர் சேக்கிழார் பெருமான்.

சைவ சமயத்தைக் காப்பாற்றியவர்கள் இரு மாதரசிகள். ஒருவர் திலகவதியார், மற்றொருவர் மங்கையர்க்கரசியார். நம் சைவக்குலம் செய்த நல்தவத்தின் பயன் திலகவதியார் என்கிறார். நல்ல தொண்டைப் பாராட்டும் பாங்கினை இதன் வழி அறியலாம்.

தம்மிடத்திலுள்ள பொருள் எல்லாம் ஆண்டவனுடையது என்னும் இயல்பிற்குப் பகையில்லாதவர்கள், மாறுபாடு இல்லாதவர்கள் அடியார்கள். அடியவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் வேண்டுவதை இல்லை என்னாது தருவதைத் தன் கடனாகக் கொண்டிருந்தவர்கள் அடியார்கள். உன் மனைவியை வேண்டி வந்தேன் எனக் கூறக்கேட்ட மறையவர்க்கு உடனே மனைவியைத் தருகிறார், இயற்பகைநாயனார். **'இயற்பகை முனிவர் ஓலம்! ஈண்டு நீ வருவாய் ஓலம்'** என்ற அடியார் கூற்றிற்குப் பிறகு, இறைவன்

'எண்ணிய உலகு தன்னில் இப்படி நம்மால்
அன்பு
பண்ணிய பரிவு கண்டு மகிழ்ந்தனம்
பழுதிலாதாய்
நண்ணிய மனைவியோடு நம்முடன் போது'

என அருளிச் செய்கிறார்.

திருநீலகண்டரும் மனைவியாரும் நீலகண்டத்தின் மீது செய்த சத்தியத்தால் கணவன் மனைவியாகப் புணர்ச்சியை மேற்கொள்ளாது வாழ்ந்து வருகின்றனர். இதனை அண்டை வீட்டார்கூட அறியமுடியாதவாறு அவர்கள் வாழ்வதை **'அற்புறு புணர்ச்சியின்மை அயலறியாமை வாழ்ந்தார்'** என சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகிறார்.

கணவன் சொற்படி நடந்து அவன் காரியம் அனைத்திற்கும் துணையாக இருந்து வாழ்வதால்தான் இல்லறம் சிறக்கும் எனக் கருதிய சேக்கிழார்பெருமான், மனைவியை **'மலையறத்தின் வேர்'** எனக் குறிக்கிறார். இயற்பகையார், இளையான்குடிமாறநாயனார், சிறுத்தொண்டர் போன்றோரின் மனைவியர், அவரவர் கணவர்களின் காரியங்களில் உள்ளம் உவந்து உற்ற துணையாக இருந்திருக்கிறார்கள் என்பதை சேக்கிழார் வியந்து பாராட்டுகிறார்.

'காதல் செயும் மனைவியே சக்தி கண்டீர்
கடவுள் நிலை அவளாலே எய்தல் வேண்டும்'

என்கிற பாரதியாரின் கருத்து இங்கே எண்ணத்தக்கது. ஓர் ஆடவன் - கடவுள் நிலை

எய்த வேண்டுமாயின் அவன் மனைவியர் ஆற்றலால் தான் எய்த முடியும் என்ற பாரதியின் கருத்து இங்கு அறியத்தக்கது.

தாம் ஏற்றுப் போற்றும் கொள்கைக்காகத் தம் இன்னுயிரையும் விடத் துணிபவர்கள். சிவனடியார்கள் என்பதை மெய்ப்பொருள் நாயனார். ஏனாதிநாயனார் வரலாறுகள் வழி நமக்குச் சொல்லிச் செல்கின்றார் சேக்கிழார் பெருமான். யாவர்க்கும் முதன்மையாகவும், எக்காரியத்திற்கும் முன் நின்று நடத்துபவனும் இறைவனே, அவனே ஒரு காரியத்தை முனைந்து செய்தால் தடையேதும் வருவதில்லை என்பதை **'முன்னவனே முன் நின்றான் முடியாத பொருளுளதோ'** என்கிறார் சேக்கிழார் பெருமான். இறைவன் முனைந்ததால் மனுநீதிச் சோழன், அவன் மகன், அமைச்சன், கன்று யாவரும் உயிர் பெற்று இறைக்காட்சி பெற்றனர்.

சைவ சமயம் என்னும் குடையின் நிழலில் தங்கியவர்களை சாதி எனும் வெயில் தாக்காது என்பதை சேக்கிழார்பெருமான் கூறுகிறார். சுந்தரர் வெவ்வேறு சாதிகளில் பிறந்த பெண்களை மணந்து கொண்டதும், சாதி, குலம், கருதாது அனைத்து அடியார்கட்கும் தாம் அடியவன் எனப்பறை சாற்றியதையும் சேக்கிழார் கட்டுகிறார். இதன்வழிச் சாதி வேறுபாடு பாராது அனைவரும் ஒற்றுமையுடன் இலங்க வழிகாட்டுகிறார் சேக்கிழார் பெருந்தகை என்பதை அறியலாம். சைவத்தில் பல்வேறு சாதியினர் இருந்தாலும் சாதி உணர்வின்றி அப்பாற்பட்ட சமய உணர்வே மிகுந்திருந்தது எனச் சொல்வதிலேயே சேக்கிழார் பிரான் முன் நிற்கிறார்.

உலகம் வாழ வேண்டும் எனில் நல்ல தொண்டு சிறக்க வேண்டும் என்ற சேக்கிழார் பெருமானின் சிந்தனைகள் என்றென்றும் மனதில் கொள்ளத்தக்கனவே!.

– **முனைவர் திரு. எஸ். ஈஸ்வரன்,** எம்.ஏ., எம்.பி.எல்.,
நேஷனல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

24.11.2007 அன்று திருவண்ணாமலை, அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற கார்த்திகைத் தீபத் திருவிழாவில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள், வேலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், செங்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. போளூர் வரதன் அவர்கள், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு. ஜி. சந்தானம் இ.ஆ.ப., அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திரு. த. பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்கள், திருக்கோயில் அறங்காவலர்கள், அலுவலர்கள் மற்றும் பங்கேற்றோர்.

24.11.2007 திருக்கார்த்திகை தீபத்திருவிழாவினை முன்னிட்டு சிறப்பு அஞ்சல் உறை வெளியிடப்பட்டது

திருமூலரின் சிவயோக நெறி



சிவத்தின் அருளால் நாம் சிவமயம் ஆகலாம்: அவனோடு கலந்து பேரின்பம் அடையலாம் என்றால், அவன் அருளை அடைவது எவ்வாறு? அதற்குரிய வழியைக் கூறும் சாத்திரமே திருமந்திரம். இப்பெருநூலை அருளிய திருமூலர் ஒரு மாபெரும் சிவயோகி. சிவநெறியில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவை வழிபாட்டு முறைகள். அரும்பு மலராகி, காயாகிப், பின்பு கனியாகிப் பயன் தருவது போல், இந்த முறைகள் ஒன்றிலிருந்து ஒன்றாக வளர்ந்து, நம்மைச் சிவத்துடன் சம்பந்தப்படுத்தும். இந்த நான்கு வழிபாடுகளுக்கும் பக்தி இன்றியமையாதது. பக்தி - சம்பந்தம் இல்லாத சித்தர் வழி, யோகவழி ஆகியவற்றைத் திருமூலர் கூறவில்லை. இவ்வழிகளில் செல்வோர் சிவத்தைத் தெரிந்து கொள்ள முடியாது என்பது அவர் கருத்து.

"உற்றுநின்றா ரொடும் அத்தகு சோதியைச்
சித்தர்கள் என்றும் தெரிந்தறிவாரில்லை
பத்திமை யாலே பணிந்து அடியார் தொழ
முத்தி கொடுத்தவர் முன்பு நின்றானே"

(திருமந்திரம் 451)

என்பது அவர்வாக்கு. சிவத்தை கலந்து நிற்போர், தாமும் சோதியாகி, தமக்குள் விளங்கும்சோதியாகிய சிவத்தை உணர்ந்து பேரின்பம் அடைவர். அது சித்தர்களால் முடியாது பக்தர்களால்தான் முடியும்என்பது இதன் கருத்து.

எனவே, திருமூலர் பக்திநெறியில் வளர்ந்து கனிந்த சிவயோகத்தையே கூறுகின்றார். சிவத்தை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டு அவனது அருள் சக்தி ஆகிய அம்மையின் துணையால் சாதனை செய்யும் யோகநெறியைத் தான் கூறுகின்றார்.

யோகநூலார், நமது உடம்பில் ஆறு ஆதாரங்கள் உள்ளன என்பர். அவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்கினை என்பவை. உடம்பை அறுத்து நுரையீரலையும், குடலையும் பார்ப்பதுபோல் இவற்றைப் பார்க்க முடியாது. ஏன் என்றால்,

இவை நமது சூட்சும தேகத்தில் உள்ளவை. கண்ணுக்கு தெரிவது நமது ஸ்தூல உடம்பு. இதைச் சூழ்ந்து கொண்டு, கண்ணுக்குத் தெரியாமல் உள்ளது சூக்கும உடம்பு. நாம் கனவில் பல இடங்களுக்குச் சென்று வருகிறோமே. அப்படிச் சென்று வருவது சூக்கும உடம்புதான். யோக சாதனை பயன் தருவதெல்லால் சூக்கும உடம்பில்தான். அதனுடன் சம்பந்தப்படுவதால் தூல உடம்பும் சிறிது பலனை அடையும். சூக்கும உடம்பில் உள்ள ஆதாரங்கள், தூல உடம்பில் உள்ள உறுப்புக்களை வைத்துச் சொல்லப்படுகின்றன. மூலாதாரம் முதுகுத் தண்டின் அடியில், இடுப்புப் பகுதியில் உள்ளது. சுவாதிட்டானம் தொப்புளில் உள்ளது. மணிபூரகம் வயிற்றின் இடப்புறம் உள்ளது. அநாகதம் இருதயத்திலும், விசுத்தி கழுத்திலும், ஆக்கிணை புருவமத்தியிலும் இப்படி ஆதாரங்கள் இரண்டு உடம்பிலும் இருப்பதைத் திருமூலர்,

"ஆகும் உடம்பும் அழிகின்ற அவ்வுடல்
போகும் உடம்பும் பொருந்திய ஆறுதான்
ஆகிய அக்கரம் ஐம்பது தத்துவம்
ஆகும் உடம்புக்கும் ஆறு அந்தமாமே"

(திருமந்திரம் 1693)

என்று கூறுகின்றார். நாம் இறக்கும்போது, தூல உடம்பை விட்டுச் சூக்கும உடம்பு வெளியேறிச் சென்று வேறு உடம்பை உருவாக்கும். ஆதலால் "போகும் உடம்பு" என்றார்.

யோக சாதனை என்பது இந்த ஆதாரங்கள் ஆறையும் இயங்கச் செய்வதுதான். குண்டலி சக்தியால் இவற்றை இயக்கலாம் என்று யோக நெறியாளர் கூறுவர். உலகை ஆட்டிப் படைக்கும் எல்லாச் சக்திகளுக்கும் தலைவி சிற்சக்தி. அவளை நன்றாகத் தியானிக்க வேண்டும். அன்போடு உருகி, அவளை நினைக்க வேண்டும். அவள் அருள் செய்தால், அவளுடைய ஆணையை கேட்டு நடக்கும் குண்டலிசக்தி, ஆதாரங்களை இயக்குவாள். விலகிநிற்க வேண்டியபோது விலகியும் நிற்பாள். குண்டலிக்குத் துணையாக ஒன்பது சக்திகள் உள்ளனர். மூலாதாரத்திலிருந்து புருவமத்தியில் உள்ள ஆக்கினைவரை செல்லும். தாமரைத் தண்டு போன்ற கழுமுனை நாடியில், அவர்கள் காவலராக உள்ளனர். இதனைத் திருமூலர்,

"கட்டிட்ட, தாமரை நாளத்தில் ஒன்பது
மட்டிட்ட கன்னியர் மாதுடன் சேர்ந்தனர்
தட்டிட்டு நின்று தளங்களின் ஊடுபோய்ப்
பொட்டிட்டு நின்றது பூரண மானதே"

(திருமந்திரம் 655)

என்று பாடுவார். கழுமுனை நாடி மூலாதாரத்திலிருந்து தொடங்கி, தளங்கள் என்ற ஆதாரங்களின் வழியாகச் சென்று, பொட்டு என்ற ஆக்கிணையில் முடிந்து, பூரண அனுபவத்திற்குக் காரணமாகிறது என்றும் இதில் கூறுகிறார்.

பக்தியின் வேகத்தால், யோகிக்கு மூச்சுக் காற்றாகிய பிராணவாயு கட்டுப்படும். அது இடைகலை, பிங்கலை நாடிகளில் எல்லோருக்கும் போல, ஓடுவதை விட்டு, நடுவில் உள்ள கழுமுனை நாடியில் ஓடும். மேலும், சிற்சத்தியின் அருளால், குண்டலிசக்தி, உடம்பின் மூலக்கனலை மூட்டி வளர்ப்பாள். அது மூலாதாரத்தில் மூண்டு எரியும். இந்தத் தருணத்தில், சிற்சத்தியின் அருள் இருந்தால்தான், உடம்பிற்குத் தீமை வராமல் இருக்கும். கழுமுனையில் ஓடும் பிராணவாயு, இந்தக் கனலை மேலும் வளர்த்து. மேல்நோக்கி - மற்ற ஆதாரங்களை நோக்கி - எழச் செய்யும். இதனை

"மூலாதாரத்தில் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறிவித்து"

என்பார் ஔவையார். திருமூலர்

"கால்கொண்டு கட்டிக் கனல்கொண்டு மேலேற்றி
பால்கொண்டு சோமன் முகம்பற்றி உண்ணாதோர்
மால்கொண்டு தேறலை உண்ணும் மருளரை
மேல்கொண்டு தண்டஞ்செய் வேந்தன் கடனே"

(திருமந்திரம் 401)

என்று பாடுவார்.

கழுமுனை நாடியில் மூலக்கனல் எழுவதால், ஒரு நாதம் உண்டாகும். அது ஆறு ஆதாரங்களையும் சுற்றிப் படரும். மூலக்கனல் அநாகதம் என்ற ஆதாரத்தில் பொருந்தும்போது இந்த நாதம், **"ஓம்"** என்று தெளிவாக யோகிக்குக் கேட்கும். இது சூக்குமப் பிரணவமந்திரம் ஆகும். இது யோகிக்கு அனுபவப்படுவதை ஔவையார்,

"குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து"

என்பார். அஜபா என்றால், ஜபிக்கப்படாத நுண்ணிய மந்திரம் என்று பொருள். அண்டவெளியிலும், நமது உடம்பிலும் இறைவன் ஆடும் நடனத்தின் இரகசியம் அஜபா மந்திரமே ஆகும். இந்த மந்திரத்தின் அனுபவத்தை யோகியானவன் பெற்றால், குண்டலிசக்தி விலகி நிற்பாள். அவள் பணி முடிந்துவிடும். பின்பு, சிற்சக்தியின் நேர்பார்வையில் யோக சாதனையை நடத்தலாம். இதனைத் திருமூலர்.

"சொல்லும் ஒரு கூட்டில் புக்குச் சுகிக்கலா
நல்ல மடவார் நயந்து உடனே வரும்
சொல்லினும் பாசச் சுடர்ப்பாம்பு நீங்கிடும்
சொல்லும் திருக்கூத்தின் சூக்குமம் தானே"

(திருமந்திரம் 899)

என்று பாடுகின்றார். நல்ல மடவார் என்பவர் சிற்சத்தி. பாம்பு என்பது, குண்டலிசக்தி. இறைவன் ஆடும் திருக்கூத்து என்பது, பஞ்சாட்சர மந்திரத்தால் யோகி பெறக்கூடிய அனுபவம் ஆகும். பஞ்சாட்சர மந்திரம், அஜபா மந்திரத்தின் விரிவே ஆகும். ஆதலால் அதனைத் திருக்கூத்தின் இரகசியம் என்றார்.

... தொடரும்



டாக்டர். திருமதி. **இராதா தியாகராஜன்**
எம்.ஏ., பிஎச்.டி.,

உலகம் உய்ய ஸ்ரீ ராமானுஜர்

வேதம் முதல் காரணன். வேத முழுப்பொருளை விண்ணுக்கும் மண்ணுக்கும் காரணமான பிரம்மனைப்படைத்து, சகல உயிர்களையும்அவன் மூலம் படைத்து, அவ்வுயிர்களை எல்லாம் பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்பரிந்து காக்கும் கருணா மூர்த்தியாக விளங்குபவனும், லெட்சுமிபதியாகவும், வைகுண்டநாதனாகவும், திருப்பார்க்கடலிலே பள்ளிகொண்டவனுமாகிய நாராயணனே முழுமுதற்கடவுள் என்றால் வியப்பேதும் இல்லை.

உயர்வற உயர்நலம் உடையவனும், மயர்வற மதி நலம் அருளினவனும், அயர்வரும் அமரர்கள் அதிபதியாகவும், விளங்குகின்ற வைஷ்ணவத்தின் நாயகனை, இராமானுஜர் உலகம் உய்ய விசிஷ்டாத்வைதம் தத்துவத்தில் உலகுக்கு வெளிப்படுத்த அவதரித்தார்.

தொண்டை மண்டலத்திலே ஸ்ரீபெரும்புதூரில் நல்ல இல்லற தர்மத்தை நடத்தி வந்த கேசவ சோமையாஜுலுக்கும், காந்திமதி அம்மையாருக்கும் பிங்கள ஆண்டு, சித்திரை மாதத்தில், வளர்பிறை பஞ்சமி திதியில், வியாழக்கிழமை நண்பகலில், கடக லக்கினத்தில், திருவாதிரை நடசத்திரத்தில், கி.பி. 1017-ல் ஸ்ரீ இராமானுஜர் அவதரித்தார்.

தனது திருக்குமாரனைக்கண்ட கேசவ சோமயாஜுலு மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். குழந்தையைக்கண்ட அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர். இக்குழந்தை

"பத்தியின் கொழுந்தோ, நயிச்சியக் கொழுந்தோ
பார தந்திரியத்தின் கொழுந்தோ
முந்தியின் கொழுந்தோ நான்மறைக் கொழுந்தோ
முதியவர் உளத்தினில் விளையும்
சித்தியின் கொழுந்தோ செழுந்தவக் கொழுந்தோ
தேசிகர் சிந்தையில் திகழும்
புத்தியின் கொழுந்தோ புண்ணியக் கொழுந்தோ
போதத்தின் பொலி சுடர்க் கொழுந்தோ"

என்றெல்லாம் வியந்தனர். (ஸ்ரீராமாநுஜ வைபவம் 271)

இராமானுஜரின் தாய்மாமனாகிய பெரிய திருமலை நம்பி குழந்தையின் தெய்வீகக் கலையினைப் பார்த்து இக்குழந்தை ஸ்ரீராமனின் தம்பியாக வந்த ஆதிசேஷனே என முடிவுக்கு வந்தார்.

எனவே, ஸ்ரீராமருக்கு அனுஜன் இவன் என்று கூறி குழந்தைக்கு ஸ்ரீ ராமானுஜன் என்று பெயர் சூட்டினார். ஸ்ரீராமானுஜர் பெற்றோர்களின் அன்பான பராமரிப்பில் வளர்ந்து வந்தார். அவர் தந்தையார் கேசவசோமயாஜுலு ஒரு நல்ல நாளில் தானே குருஸ்தானத்தில் இருந்து இராமானுஜரின் எட்டாவது வயதில் வேதங்களை கற்றுக் கொடுத்தார். வடமொழியில் நன்கு தேர்ச்சி பெற்று வேத வித்தகரானார். இந்நிலையில் இராமானுஜருக்கு

16 வயது ஆகிய பொழுது வேத நெறிப்படி இரட்ஷகாம்பாள் என்ற மங்கையை திருமணம் செய்து வைத்தார். சில காலம் கடந்து இராமானுஜரின் தந்தையார் தன் கடமைகளையெல்லாம் நிறைவேற்றி மன மகிழ்ச்சியில் திருநாடு அலங்கரித்தார். அதன் பின்னர், தன் தாயாருடனும், மனைவியுடனும் சில காலம் ஸ்ரீபெரும்புதூரில் வாழ்ந்து வந்தார். அதன் பின்னர், சகல சாஸ்திரங்களையும் கற்கவேண்டும் என்ற ஆவலுடன் தன் தாயாருடனும்,

பெ. ராமநாதபிள்ளை, செயல் அலுவலர்

மனைவியுடனும் ஸ்ரீபெரும்புதூரை நீங்கி ஸ்ரீகாஞ்சிபுரம் வந்து சேர்ந்தார். அச்சமயம் ஸ்ரீகாஞ்சி நகரில் யாதவபிரகாசர் என்ற பண்டிதர் ஒருவர் இருந்தார். ஸ்ரீஇராமானுஜர் சகல சாஸ்திரங்களையும் யாதவபிரகாசரிடமிருந்து அறிந்து கொள்ள யாதவபிரகாசரின் திருமடம் சென்று அவரை வணங்கி, தன்னை சீடனாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ள, யாதவபிரகாசரும் அவரை சீடனாக ஏற்றுக் கொண்டு நாள்தோறும் இராமானுஜருக்கு கலையினை கற்றுக்கொடுத்தார்.

யாதவபிரகாசர் இராமானுஜரின் குருவாக இருந்த போதிலும் அறத்துக்கு இழுக்காக விளங்கும் பொறாமை, சினம், ஆணவம் போன்ற தீய குணங்களைக் கொண்டிருந்தார். இராமானுஜரின் அறிவுத்திறனை சகித்துக் கொள்ள முடியாமல் பல துன்பங்களை இராமானுஜருக்கு கொடுத்தார். ஸ்ரீகாஞ்சி வரதராஜப்பெருமாளின் திருவருளால் ஸ்ரீ இராமானுஜர் குருவினால் வந்த துன்பங்களை பொறுத்துக்கொண்டார்.

அந்நாளில் ஸ்ரீகாஞ்சி நகரை ஆண்ட மன்னனின் மகளுக்கு பிர்மராட்சஷன் என்ற பேய் பிடித்து, பல வைத்தியங்கள் பார்த்தும் குணமாகாமல் மிகுந்த துன்பத்தில் இருந்த போது யாதவபிரகாசரின் பெருமையை அறிந்து, அவர் மூலம் தன் மகளைப்பிடித்த பிர்மராட்சஷனை ஓட்ட முடியும் என்ற எண்ணத்தில் யாதவபிரகாசரை அழைக்க, யாதவபிரகாசரும் அதனை ஏற்றுக் கொண்டு, தன் சீடருடன் அரண்மனைக்குச் சென்றார். அவருடன் ஸ்ரீஇராமானுஜரும் சென்றார். அரண்மனையில் ராஜகுமாரியை அழைத்து, எதிரே உட்கார வைத்து மிகுந்த கர்வத்துடன் மந்திரத்தைச் சொல்லி அரசகுமாரியைப் பிடித்த பிர்மராட்சஷனை விட்டு விலகும்படி அதிகாரத்துடன் ஆணையிட்டார். அவர் நினைத்தது நடக்கவில்லை.

பிர்மராட்சஷன் மிகுந்த ஆவேசத்தோடு அவர் முன் காலை நீட்டிக்கொண்டான். பயங்கரமாக சிரித்தான். பின், யாதவபிரகாசரை நோக்கி, தான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொன்னால் தான் இந்த பெண்ணை விட்டு ஓடி விடுகிறேன் என்று கூறி முதல் கேள்வியாக 'யாதவ பிரகாசரே, நீர் இப்பிறவியில் சாஸ்திரம் படித்த பண்டிதனாக இருப்பதற்கு சென்ற பிறவியில் நீர் செய்த புண்ணியம் என்ன?' என்றும் இரண்டாவது கேள்வியாக 'யாதவ பிரகாசரே இப்பிறவியிலே நான் பிர்மராட்சஷனாக பிறப்பதற்கு சென்ற பிறவியில் நான் செய்த பாவம் என்ன? என்று கேட்டான். பதில் கூற முடியாமல் வெட்கமுற்று மயங்கினார் யாதவபிரகாசர்.

உடனே, அந்த பிர்ம்மராட்சஷன் இந்த இரண்டு கேள்விகளுக்கும் நானே பதில் சொல்லுகிறேன் என்று சொல்லி "யாதவரே நீர் சென்ற பிறவியில் மதுராந்தகம் என்ற ஊரில், தாமரைத்தடாகம் அருகில் உள்ள புதர் ஒன்றில் உடும்பாய் வாழ்ந்து வந்தீர். அச்சமயம் திருமால் அடியார் ஒருவர், அத்தடாகத்தில் நீராடி உணவு சமைத்து, நாராயணனுக்கு சமர்ப்பித்துவிட்டு பெருமாளே இந்த அன்னத்தை ஏற்றுக்கொள்ளும் என மனமார வேண்டி, அதன் பின்னர் அந்த உணவை உண்டு, அந்த எச்சில் இலையை நீர் உடும்பாய் இருந்த புற்றில் எறிந்துவிட்டு போய்விட்டான். உடும்பாய் இருந்த நீர் திருமாலடியார் எறிந்த எச்சிலையில் இருந்த சோற்றை உண்டதால் இப்பிறவியில் மனிதனாக அதிலும் சாஸ்திரம் தெரிந்த பண்டிதனாக பிறக்கும் வாய்ப்பு கிட்டியது" என்ற முதற்கேள்விக்கு பதிலளித்துவிட்டு, இரண்டாவது கேள்விக்கு விடையாக 'நான் சென்ற பிறவியில் பிராமணனாக இருந்தபோதிலும், யாகத்தில் மந்திரங்களை தவறாக உச்சரித்ததினால் பிர்ம்மராட்சஷனாய் இப்பிறவியில் பிறக்க நேர்ந்தது என்று சொல்லி, யாதவ பிரகாசரே உம்மால் என்னை விரட்ட முடியாது, உம்முடன் வந்திருப்பராகிய சகல புருஷ லட்சணங்களையும் பொருந்தியவராகிய அறிவில் நிகரற்றவராகிய ஸ்ரீஇராமானுஜர் என்ற மகான் தன்னுடைய திருவடியால் என்னைத்தொட்டு, அவருடைய மங்களமாகிய ஸ்ரீ பாத தீர்த்தத்தை தந்தால், அந்த நிமிடமே நான் அகலுவேன், இது சத்தியம் என்று கூறினான்.

உடனே மன்னன் ஸ்ரீராமானுஜரை அணுகி, மகானே என் மகளை இரட்சிப்பீர் என்றான். உடனே இராமானுஜர் அந்த பிர்ம்மராட்சஷனிடம் 'நீ அரச குமாரியை விட்டு விலகிவிட்டாய் என்பதை நாங்கள் எவ்வாறு அறிவோம்' என கேட்டார். அவருக்கு பதிலாக அந்த பிர்ம்மராட்சஷன் "உமது திருவடி பட்டவுடன் உமது ஸ்ரீபாத தீர்த்த பிரசாதம் கிடைத்தவுடன் அரண்மனைக்கு வெளியில் உள்ள ஆலமரத்தின் உச்சாணிக்கொம்பை ஒடித்துச்செல்வேன்" இதுவே அடையாளம் என்றான்.

ஸ்ரீஇராமானுஜரும், மிகுந்த கருணையுடன் தன் திருவடியை அந்த பிர்ம்மராட்சஷன் தலையில் வைத்து, ஸ்ரீபாத தீர்த்தத்தை அருளினார். உடனே அந்த பிர்ம்மராட்சஷன் அரசகுமாரியை விட்டு ஓடினான். அச்சமயத்தில் எந்த வித முகாந்திரமும் இல்லாமல், அவன் சொன்னபடியே ஆலமரக்கிளை ஒடிந்து, தானாக கீழே விழுந்தது. அவனும் தூய சரீரம் பெற்று விண்ணுலகை அடைந்தான். அரசகுமாரியும் தன் சுய உருவம் அடைந்து சௌபாக்கியவதியாக விளங்கினாள். ஸ்ரீஇராமானுஜரின் மகிமையை அனைவரும் அறிந்து, அரசகுமாரி, அரசன், மந்திரிகள் மற்றும் அனைவரும் வணங்கினார்கள். மன்னன் பொற்காசுகளால் ஸ்ரீஇராமானுஜருக்கு அபிஷேகம் செய்தான். இதையெல்லாம் நேரில் பார்த்த யாதவபிரகாசர் மிகுந்த பொறாமை கொண்டார். ஸ்ரீஇராமானுஜர் புகழ் எல்லா திசைகளிலும் பரவியது. ஆனால் ஸ்ரீஇராமானுஜரோ, தனக்கு கிடைத்த செல்வங்களை யாதவபிரகாசரின் திருவடியில் சமர்ப்பித்துவிட்டு, எப்போதும் போல் யாதவபிரகாசரிடம் சாஸ்த்திரங்களை கற்றுவந்தார்.

... தொடரும்

தமிழாய்ந்த ஆங்கில அதிகாரி

பொதிகையில் தவழ்ந்து தென்னன் பொருப்பிலே வளர்ந்து சிறந்த மொழி தமிழ். வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து வளர்ந்தமொழி தமிழ். கற்கத் தொடங்கியவர்களைத் தன்பால் ஈர்த்து மேலும் மேலும் சிறக்கச் செய்து அறத்தையும் அன்பையும் இறையையும் ஊட்டி வளர்ப்பது தமிழ்.

இம்மொழியின் சிறப்பை விளக்க ஈராயிரம் ஆண்டுக்கு

முற்பட்ட இலக்கணம், இலக்கியம், வரலாற்றுக் கல்வெட்டுகள் உள்ளன.

ஏழு சொற்கள் முதல் ஏழாயிரம் சொற்கள் வரை உள்ள பாடல்கள் தமிழில் உள்ளன. காப்பியங்களும் கதைகளும் கற்றாரையும் கேட்டாரையும் பிணைக்கத்தக்கன.

இத்தகைய சிறப்பும் செழிப்பும் வாய்ந்த, தமிழில் அறம் பொருள், இன்பம் மூன்றையும் விளக்கும் சிறப்புப் பெற்றது திருக்குறள் ஆகும்.

திருக்குறள் அதன்பால் ஈடுபாடு கொண்டு கற்றோர்க்கு, மன நிலைக்கு ஏற்பப் பொருள்தரும் தன்மையும் உண்டு. இலக்கிய நூல்களில் அதிக அளவில் உரை எழுதியவர்களையும், எழுதிக் கொண்டிருப்பவர்களையும் கொண்டது திருக்குறளேயாகும்.

எல்லாப் பொருளும் இதன்பால் உள்ளன. இதன்பால் இல்லாப் பொருளே இல்லை என்று கூறியதும், கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத் தரித்த குறள் எனக் கூறப்படுவதும் இதனால்தான்.

சொல் புதிது, பொருள் புதிது, சோதி மிக்க நவ கவிதையாக, எக்காலத்தும் மிளிரும் தகுதி திருக்குறளுக்கு உண்டு.

பாராள வந்த அதிகாரி திருக்குறளுக்கு அடிமைப்பட்டுப் போனான் என்பது வரலாறு.

பாரததேசம் ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்த காலம் அது. முன்னர் பொருளையும் பின்னர் கொடியையும் விற்பதற்கு வந்தனர் ஆங்கிலேயர்.

பிரான்ஸிஸ் வொயிட் எல்லீஸ் 1777ல் பிறந்த சாதாரண குடிமகன். இவர் 1796ல் ஆங்கிலேயக் கம்பெனியில் கீழ்நிலை எழுத்தராகச் சேர்ந்தார். பின்னர் கம்பெனி கணக்குகளை எழுத சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். சென்னையில் அவருக்கு நில நிர்வாகத் துறை ஒதுக்கப்பட்டது. அப்பிரிவில் 8 ஆண்டுகள் பணிபுரிந்தார். பணியின் பகுதியாக நிலங்களைப் பற்றியும், அதன் உடமை, உரிமை மற்றும் பயன்படுத்துவோரின் கடமை ஆகியவற்றைப் பற்றி அறிவதற்காக, தமிழக மக்களிடம் நெருங்கிப் பழகினார்.

அவரது பணியில் ஆழ்ந்த ஈடுபாடும். பொதுமக்களிடம் பழகும் மாண்பும் மேலாளர்களை உணரச் செய்து, அவரைச் சென்னை மாவட்டக் கலெக்டராக நியமித்தனர். கம்பெனியார் பின்னர் 1806ல் தஞ்சையில் நீதிபதியாகவும், 1809ல் சென்னை மாகாணத்தில் நிலங்கள் குறித்த ஆணையாளராகவும் நியமிக்கப்பட்டார்.

இந்தப் பதவிகள் எல்லாம் அவருக்கு தமிழ்நாட்டு மக்களுடன் மிக நெருக்கமாகப் பழகும் வாய்ப்பினை ஏற்படுத்தின. தமிழ்மொழியைக் கற்றதுடன் பிற மொழிகளையும் கற்றார். 1818ல் திராவிட மொழிகள் வட இந்திய மொழிகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டவை என்பதையும், இவை தனித்து இயங்கும் தன்மையுடையன என்பதையும் உலகிற்கும் எடுத்து உரைத்தார். அந்த ஈடுபாடும் ஆழ்ந்த கருத்துப்புலமையும் அவரை இலக்கியங்கள்பால் நிலைகொள்ளச் செய்தன. அதிலும் சிறப்பாக, திருக்குறள் அவருக்கு ஒரு பொக்கிஷமாகத் தோன்றியது. அதனை ஒரு வேதமாகவே கொண்டு தனது நிர்வாகத் திறமையில்

பயன்படுத்தும் நிலையைப் பெற்றார்.

இவர் சென்னை மாவட்டக் கலெக்டராக நிர்வாகம் செய்தபோது, 1816ல் பெரும் தண்ணீர்ப்பஞ்சம் ஏற்பட்டது. அதற்காக 27 கிணறுகளைச் சென்னை மாவட்டம் முழுக்க ஆங்காங்கே எடுத்து மக்களுக்குச் சேவை செய்தார்.

தான் செய்த பணிகளை வெளியில் தம்பட்டம் அடிக்காமல், ஒரே ஒரு பொது இடத்தில் இந்தக் கிணறு தோண்டிய தகவலைக் கூறி அதனை எதற்காகச் செய்தார் என்பதையும், தெளிவாக்கி திருக்குறளையே ஒரு வரியில் சேர்த்து மயிலாப்பூரை அடுத்த ராயப்பேட்டை பெரிய பாளையத்தம்மன் கோயில் பின்புறம் தோண்டிய கிணற்றின் கைப்பிடிச்சுவரில் கல்வெட்டு ஒன்றை 1818ஆம் ஆண்டில் வெட்டி வைத்தார்.

இக்கல்வெட்டில் ஜார்ஜ் 111ஆம் அரசரின் 57ம் ஆண்டில், யூ லெபத் என்னும் கவர்னரின் கீழ் இருந்த சென்னை மாவட்டக் கலெக்டராகவும், நாணயச் சாலை பொறுப்பாளராகவும், இருந்த எல்லிசன் என்னும், நான்,

"புலவர் பெருமானான மயிலையம்பதியின், தெய்வப் புலமைத் திருவள்ளுவரின் திருக்குறளில் மனம் ஒன்றி, 737ஆம் குறளினை உணர்ந்து 27 கிணறுகள் கண்டு, வார, திதி, நட்சத்திர, யோக, கரணம் பார்த்து புண்யாரஹ வாசனம் செய்தேன்" என்று குறிப்பிட்டுள்ளது.

திருக்குறளின் பாடல்வரிகளை எடுத்தாண்டு வெட்டப்பட்ட கல்வெட்டு விபரம் கீழே உள்ளது.

சென்னை இராயப்பேட்டை பெரியபாளையத்தம்மன் திருக்கோயில் கிணற்றில் இருந்த கல்வெட்டு

பாரெலா நிழற்று பரியரிக்குடையோன்
வாரியுஞ் சிறுக வருபடைக் கடலோன்
ஆர்கட லதிர வார்த்திடுங் கப்பலோன்
மரக்கல வாழ்வின் மற்றொப் பிலாதோன்
தனிப்பெருங் கடற்குத் தானே நாயகன்
தீவுகள் பலவும் திதி பெறப் பரப்போன்
தன்னடி நிழலிற் றங்கு பல்லுயிர்க்குந்
தாயினுமினியன் தந்தையிற் சிறந்தோன்
நய நெறி நீங்கா நாட்டார் மொழி கேட்டு
உயர் செங்கோலும் வழாமை யுள்ளோன்
மெய்ம்முறை ஒழுக்கம் வீடுரா தளிப்போன்
பிரிதன்னிய சுகோத்திய யிபானியமென்று
மும் முடி தரித்து முடிவிலாத்
திக்கனைத்துந் தனிச் சக்கர நடாத்தி
யொரு வழிபட்ட வொருமையாய்என்
வீர சிங்கானத்து வீற்றிருந் தருளிய
சோர் சென்று மூன்றா மரசற்கு 57ம் ஆண்டில்
காலமுங் கருவியுங் கருமமுஞ் சூழ்ந்து
வென்றியொடு பொருள் புகழ் மேன்மேற்
பெற்ற
கும்பினியார் கீழ்ப்பட்ட கனம் பொருந்திய
யூ லெயத் தென்பவ னாண்டவனாக
சேர சோழ பாண்டியாந்திரங்
கலிங்க துளுவ கன்னட கேரளம்
பணிக்கொடு துரைத்தனம் பண்ணும் நாளில்
சயங்கொண்ட தொடிய சானுறு நாடெனும்
ஆழியிலிழைத்த வழகுறு மாமணி
குணகடன் முதலாக குடகடலளவு
நெடுநிலத்தாழ நிமிர்ந்திடு சென்னப்
பட்டணத் தெல்லீசனென்பவன் யானே
பண்டார காரியபாரஞ்சுமக்கையிற்
புலவர்கள் பெருமான் மயிலையம்பதியான்
தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்
திருக்குறடன்னிற் றிருவுளம் பற்றிய
"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு"
என்பதின் பொருளை என்னுளாய்ந்தது
ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்த
௵1740 செல்லாநின்ற
இங்கிலீசு ௵1816ம் ஆண்டில்
பிரபாவதி ௵க்கு மேற்செல்லா நின்ற
பஹுதான்ய ௵த்தில் வார திதி
நக்ஷத்திர யோக கரணம் பார்த்து
சுப திநத்தி லிதனோ டிருபத்தேழு
துரவு கண்ட புண்யாஹவாசநம்
பண்ணுவித்தேன்.
1818"

என்றுள்ளது. இக்கல்வெட்டில் தமிழகத்தின் வழக்கத்திலிருந்த வருடம், திதி, கரணம், யோகம் ஆகியவற்றைக் குறித்து விளக்கி உயர் இலக்கியமாம் திருக்குறளின் சிறப்பையும் விளக்கிக் கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. இன்றளவும் இந்தக் கிணறு பலருக்கு குடிநீர் வழங்கும் கிணறாகப் பயன்பட்டு வருவது கருத்திற்கொள்ளத் தக்கது.

இந்தக் கல்வெட்டு தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் 1978க்கு முன் திருக்கோயிலிலிருந்து கொண்டு செல்லப்பட்டு 1992க்குப் பிறகு மதுரை திருமலை நாயக்கர் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

- தகவல் மற்றும் புகைப்படம்
இரா. இரகுநாதன்,
செயல் அலுவலர்

பறவைகளுக்கும் விலங்குகளுக்கும்

பறவைகளும் விலங்குகளும் சிவபூசை செய்து மேன்மை பெற்றதை அறிந்த பெரியோர்கள் சிவபெருமானிடம் அவற்றிற்கு அருள் செய்ததைப் போல் எமக்கும் அருள் செய்யக் கூடாதா என்று விண்ணப்பம் செய்து பாடல்களை அருளிச் செய்துள்ளனர். இவ்வகையில் நக்கீரர், கமலை ஞானப்பிரகாசர், பாம்பன் சுவாமிகள் முதலானோர் பாடியவை தனிச்சிறப்பு மிக்கவைகளாகும்.

நக்கீரர் தாம் அருளிய கோபப் பிரசாத சாதத்தில் பெருமான் பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் அருளிச் செய்தததைக் கூறுகிறார். இதன் சாரத்தைப்

"பருங்கை மால் யானை யேனம்
பாய்புலி, அரிமான் மீனம்
இருங்குறள் ஆமை கொண்ட
இகல்வலி கடந்தாய் போற்றி
குரங்கு பாம்பு எறும்பு நாரை
கோழி ஆண் அலவன் தேரை
கருங்குரீஇகழுகின் அன்புக்கிரங்கிய
கருணை போற்றி"

என்று வரும் திருவிளையாடற்புராணத் தொடர்களால் அறியலாம். கமலை ஞானப்பிரகாசர் தாம் அருளிச் செய்த புஷ்பவிதி என்ற நூலில் பறவைகளும் விலங்குகளும் அருச்சித்துப் பேறுபெற்றதைக் (பாடல் எண் 35) குறித்துள்ளார். மலர்களின் வகைகளையும் அவற்றைச் சாத்துவதால் உண்டாகும் பயன்களையும் விரிவாகக் கூறியுள்ளார். இது பொதுவிதி என்றும் பக்தியில் மூழ்கியிருப்பார்க்கு விதிகள் ஏதுமில்லை என்றும் கூறுகிறார்.

தொடர்ந்து, பறவைகளும் விலங்குகளும் சிவபூஜை செய்யும் போது எந்த விதியைக் கடைப்பிடிக்க இயலும்? எனினும் இவற்றின் பூசையையும் இறைவன் ஏற்றுக் கொண்டு அருள்புரிந்துள்ளார் அல்லவா? என்று கேட்கிறார். இறைவன் மீது அன்பு கொண்டு செய்யும் எதுவும் பூசையே என்பது இதன் பொருளாகும். அப்பாடல்

குதிரை சிலந்தி கழுகு உடும்பு
குரங்கு நரிஈ எறும்பு
மதுவண்டு அலவன் கரியரியா
மஞ்சை யெகினம் புறா வார்ந்தை
ததியென் காமை முயல் கோம்பி
தத்தை கேழல் அர்ச்சிப்ப
விதியும் விலக்கும் கடந்தார்க்கு
விதியாலொன்றை விதிப்பார் யார்?

பொருள் : குதிரை, சிலந்தி, கழுகு, உடும்பு, குரங்கு, நரி, ஈ, எறும்பு, தேனீ, நண்டு, யானை, சிங்கம், பசு, மயில், அன்னம், புறா, ஆந்தை, கரடி, ஆமை, முயல், பச்சை ஓணான், கிளி, பன்றி முதலியவை செய்த பூசையையும் சிவபெருமான் ஏற்றுக் கொண்டுள்ளார். அவை அன்பினால் விதியையும், ஆர்வத்தால் விலக்கையும் கடந்தவை. அவை செய்யும் பூசைக்கென ஒரு விதியை விதிக்க முடியுமா? தொடர்ந்து வரும் 37ஆம் பாடலில் பறவைகளும் விலங்குகளும் பூசித்துப் பேறுபெற்றது குறிக்கப்பட்டுள்ளது.

எமக்கும் அருள்செய்வாய்

திருவாசகத்தில் மாணிக்கவாசகர் பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் பெருமான் அருள் செய்ததைப் பல இடங்களில் குறித்துள்ளார்.

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் வேண்டுதலையும் காணலாம். சுவாமிகள் திருப்பா (18வதான பகுதியில்) பரம்பொருள் என்னும் தலைப்பில் பத்து பாடல்களை அருளிச் செய்துள்ளார். அதில் பல்வேறு தலங்களில் பூசித்துப் பேறு பெற்ற பறவைகள், விலங்குகளின் பெயர்களைக் கூறியுள்ளார். மனிதனாகப் பிறந்த நான் இதுவரை உனது திருவருளைப் பெறவில்லையே. இந்தப் பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் கீழ்ப்பட்டவனாகி விட்டேனே! நீ திருவுள்ளம் இரங்கி எனக்கு அருள்புரிவாய் என்று வேண்டுகிறார். ஒவ்வொரு பாடலிலும் இந்த வேண்டுதலைக் குறிப்பிடுகிறார்.

அவர் குறிப்பிடும் தலத்தையும் அங்கு வழிபட்டுப் பேறுபெற்ற விலங்குகள் பறவைகள் பெயர்களையும் தனிக் கட்டத்தில் காணலாம்.

கரிவலம் வந்த நல்லூர்	யானை	திருநெல்வேலி	யானை, பறவை
மதுரை	கருங்குருவி, நாரை	திருவான்மியூர்	பசு, காமதேனு
மயேந்திரபள்ளி	எலி	திருவண்ணாமலை	கஸ்தூரிமான்
ஓமாம்புலியூர்	புலி	குரங்கணில் முட்டம்	காக்கை, அணில்
அவிநாசி	காக்கை	திருவலிவலம்	கரிக்குருவி
ஆடானை	ஆடு	இராமேசுவரம்	குரங்கு, நரி
ஆவூர்	பசு	மயிலாடுதுரை	யானை, குதிரை, குரங்கு, பாம்பு, பூனை, நரி, கழுகு, கிளி
திருக்கழுக்குன்றம்	கழுகு	திருநாரையூர்	நாரை
திருநாகேச்சுவரம்	பாம்பு	திருக்காளத்தி	சிலந்தி, யானை, பாம்பு
திருஆனைக்கா	சிலந்தி, யானை	எறும்பியூர்	எறும்பு
திருந்துதேவன் குடி	குதிரை, நண்டு	திருப்பைஞ்ஞீலி	வாழைமரம்

- நன்றி சிவமஞ்சரி 56ஆவது மலர்

பூசை.ச. ஆட்சிலிங்கம்

எண்ணச்சிதறல்

கந்த பெருமானுக்கு உகந்த மிக உயர்ந்த விரதமான கந்த சஷ்டியின் மகிமைகளையும் அந்த விரதமிருப்போருக்கு ஏற்படும் முருகன் அருளையும் விவரித்த கட்டுரை வெகு அற்புதம்!

பெரியபுராணம் கூறும் அமுதூட்டிய சிவனடியார்கள் பற்றிய கட்டுரை அந்த அடியவர்கள் சிவனடியார்களுக்கு உணவிட்டு மகிழ்ந்த சம்பவங்களை விவரித்து அவர்கள் மகத்துவங்களை உணர்த்திவிட்டது.

அருட்பெருஞ்சோதி தனிப்பெருங் கருணையாம் அருளாளர் இராமலிங்க வள்ளலார் அருளிய திருவருட்பாவில் உலக அமைதிச் சிந்தனைகள் எனும் நல் முத்துக்கள் பதிந்திருப்பதை ஆய்வு செய்து வெளிக் கொணர்ந்த கட்டுரை அந்த மகானின் மகத்தான சிந்தனைகள் எவ்வளவு அர்த்தபுஷ்டியானவை என்பதை உணரச் செய்து சிலிர்க்க வைத்துவிட்டது!

- த. சத்தியநாராயணன், அயன்புரம்

முருகப்பெருமானுக்கு மிகமிக உகந்த வைபவங்களில் கந்த சஷ்டியும் ஒன்று. முருகனடிமைகளை நினைத்த மாத்திரத்திலேயே மனங்குளிர வைக்கும் கந்த சஷ்டி வைபவத்தின் மகிமைகளை திரு. சதாநந்தன் அவர்களின் கட்டுரை மெய்சிலிர்க்கும்படியாக எடுத்துரைத்திருந்தது. அதேபோன்று டாக்டர். சரசுவதி இராமநாதன் வழங்கியிருந்த வேலும் மயிலும் துணை கந்தர் அனுபூதி தொடர் கட்டுரையும் முருகனடிமைகளை முருகனை நினைத்து உருக வைத்திருந்தது.

அண்ணாமலையானே போற்றி! என்ற கட்டுரையும், அருள்மிகு அருணாசலேஸ்வரர் அருள்மிகு உண்ணாமுலையம்மை ஆகியோரது அட்டைப்படமும், திருவண்ணாமலை கார்த்திகை தீப வைபவத்தின் அருமை பெருமைகளை உலகிற்கு உணர்த்துவதாக இருந்தது.

- இரா. வையாபதி, தோட்டக்குறிச்சி

தண்டு மாரியம்மன் திருக்கோயில்

தற்போது கோவை என்று அழைக்கப்படும் கோயமுத்தூர் முன்பு "கோவன் புதூர்" என்ற பெயருடன் சிற்றூராக இருந்தது. கி.பி.1281ல் வெட்டப்பட்ட வீரபாண்டியன் கல்வெட்டு அதனை உறுதி செய்ய உதவுகின்றது. அக்காலத்தில் கோவை நகரம் கோட்டை, பேட்டை எனும் இரு பிரிவாகப் பகுக்கப்பட்டு இருந்தது. கோட்டை ஈசுவரன் கோவில், பேட்டை ஈசுவரன் கோவில் என்று இரு சிவன் கோவில்கள் இன்றும் பொலிவுடன் இருக்கின்றன.

திப்புசுல்தான்

வணிகம் செய்வதற்கு வந்த ஆங்கிலேயர் அக்காலத்தில் நம்மிடையே காணப்பட்ட ஒற்றுமையின்மையைப் பயன்படுத்தி நாட்டை அடிமைப்படுத்த பல்வேறு தந்திரங்களையும் வஞ்சகத் திட்டத்தையும் கையாண்டனர். நாட்டுப்பற்று மிக்க பாளையக்காரர்கள் இதை எதிர்த்தது போல் திப்புசுல்தான் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்தான். 1790ல் திப்பு மன்னனது படைகள் கோவை கோட்டை மதிலுக்கு உள்ளே தங்கியிருந்தது. அந்தக் காலத்தில் தான் நம் அன்னை தண்டுமாரி மக்களுக்கு அருள்மழை பொழியத் தன் இருப்பை உணர்த்தி வெளிப்பட்டு வீற்றிருக்கத் தொடங்கினாள்.

"தண்டு" எனும் சொல்லுக்கு படை வீரர்களின் "கூடாரப்பகுதி" என்பது பொருள். மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாபி என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார். சிறுத்தொண்டராகிய பரஞ்சோதி வடநாட்டுக்குப் படையெடுத்துச் சென்று வென்ற செய்தியைச் சுட்டிக் காட்டும்போது சேக்கிழார் பெரிய புராணத்தில் இச்சொல்லை எடுத்தாள்கிறார்.

கனவில் வந்த தாய்

திப்புவின் படைக் கூடாரத்தில் இருந்த வீரன் ஒருவன் கனவில் அன்னை காட்சி கொடுத்தாள், கண்ணுக்கும் கரத்துக்கும் அரிய நம் தாய் தண்டு மாரியம்மன் கற்பனைக்கு எட்டாத காலம் முதல் இப்பகுதியில் வாழ்ந்து வருவதாகக் கூறினாள். வேப்பமரங்களுக்கும் காட்டுக் கொடிகளுக்கும் இடையில் நீர்ச்சுனைக்கு அருகில் மாரி வீற்றிருந்த கோலத்தைக் கனவில் கண்ட வீரன் மறுநாள் அதிகாலையில் விரைவாக ஆவலுடன் தேடினான். வேப்பமரத்தின் கிளைகளை விலக்கிப்பார்த்த போது அருளரசியான அன்னை மாரியைக் கண்டான், கைதொழுதான். களித்துக் கூத்தாடினான். நண்பர்களுக்குக் காட்டினான். நல்ல நாளில் சிறு மேடைமீது தாயை எழுந்தருளச் செய்தான். அன்னை கொலுவிருக்கும் அரிய

செய்தி எங்கும் பேசப்பட்டது. படைவீடான தண்டு இருந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்ட மாரி தண்டுமாரி என அழைக்கப்பெற்றாள். பசியும், பிணியும், பகையும் நீங்க அன்னையை எண்ணி வழிபட்ட பக்தர் கூட்டம் நாளும் பெருகியது. தண்டுமாரியின் புகழ் எங்கும் எதிரொலித்தது.

நோய் தீர்க்கும் தாய்

அக்காலத்தில் காலரா, பிளேக், அம்மை என்பன கொடிய நோய்களாகக் கருதி அஞ்சப்பட்டன. அம்மை நோய் கண்டால் ஆங்கிலேயர் அஞ்சி நடுங்கியதை ஊமைத்துரையின் வாழ்க்கைக் குறிப்பு நமக்குத் தெளிவாக்குகின்றது. பிளேக் நோய் தீர்த்தருளும் தாயாக பிளேக் மாரியை வணங்குவது போல் அம்மை நோய் மாரியம்மன் பக்தர்களுக்கு நோயணுகா நல்வாழ்வை வழங்கி வருகின்றாள்.

வழிபாட்டின் மேன்மை

ஸ்ரீ துர்க்கா தேவியின் அம்சமாகக் கொலுவிருக்கும் தண்டு மாரியம்மன் தீராத நோய் தீர்ப்பதில் வல்லவள். செவ்வாய்க் கிழமைகளில் இராகு கால நேரத்தில் எலுமிச்சம் பழத்தோலில் நெய்தீபம், நல்லெண்ணெய் தீபம் ஏற்றி ஒன்பது வாரங்கள் வழிபாடு கைகூடும். நல்ல மணவாளன் வந்து கைப்பற்றுவான் என்பது நடைமுறையில் உள்ள நம்பிக்கையாகும். பக்தர்கள் வெள்ளிக்கிழமை மற்றும் அமாவாசை, பௌர்ணமி, தமிழ்மாதப் பிறப்பு நாட்களில் சிறப்பாக வழிபாடு செய்து சகல நன்மைகளையும், சௌபாக்கியங்களையும் குறைவில்லாமல் பெற்று வாழ்ந்து பயனடைந்து அனுபவித்து வருகின்றனர்.

சிற்பங்கள்

கோவை, அவிநாசி நெடுஞ்சாலையில், உப்பிலிபாளையத்தில் வடக்கு நோக்கித் தண்டு மாரியம்மன் வீற்றிருக்கின்றாள். கருவறையைச் சுற்றிலும் சுவரில் சிற்பங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. கிழக்குப் பகுதியில் இராஜகணபதியும், எருமைத்தலைமீது வெற்றிக்களிப்புடன் துர்க்கையும், அருள் பொங்கக் கொலு வீற்றிருக்கின்றனர். தென் பகுதியில் தட்சிணாமூர்த்தி கல்லால மரத்தின் மீது வீற்றிருக்கின்றார். மேற்கு நோக்கி மகாஇலட்சுமி தாமரையில் அமர்ந்து அருள்கின்றாள். முருகப்பெருமான் வேலேந்தி நின்று அருள்கின்றார். நுழைவாயிலில் மகிஷாசுர மர்த்தினியும், கஜலட்சுமியும், சரசுவதியும், இலட்சுமியும் அருள் பொங்கக் காட்சி தருகின்றனர். திருக்கோயில் விமானத்தில் சமயபுரம் மாரியம்மன், காமாட்சியம்மன், விசாலாட்சித்தாய், சரஸ்வதி, கருமாரியம்மன், தனலட்சுமி,

அயனமாரியம்மன், காயத்ரி, கோமாரி, லட்சுமி, தண்டுமாரி ஆகியோர் அழகுற விளங்குகின்றனர்.

திருவிழாக்கள்

அருள்மிகு தண்டுமாரியம்மன் திருக்கோயில் ஆண்டுத் திருவிழாவான சித்திரைப் பெருந்திருவிழா ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதம் முதல் செவ்வாய்க்கிழமையன்று தொடங்கப் பெற்று 13 நாட்கள் இசை, இலக்கிய நிகழ்ச்சிகளுடன் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதுசமயம் அம்மனுக்கு அபிஷேக ஆராதனைகளும் சிறப்பாக நடைபெறும். திருவிழா, பூச்சாட்டுடன் தொடங்கப் பெற்று வசந்த விழாவுடன் நிறைவு பெறுகிறது.

பூச்சாட்டு

சித்திரை மாதத்தில் முதல் செவ்வாய்க் கிழமையன்று அருள்மிகு தண்டுமாரியம்மன் திருக்கோயிலின் சித்திரைத் திருவிழாவானது பூச்சாட்டுடன் தொடங்கப் பெறுகிறது. அதுசமயம் அன்று மாலை 6.30 மணியளவில் அம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்வித்து, மேள தாளங்கள் முழங்க கம்பம் எடுத்து வந்து சுவாமி சந்நிதானத்தில் வசந்த மண்டபத்தில் கம்பத்தை நடச் செய்து. மலர் மாலைகளினால் கம்பத்திற்கு அலங்காரம் செய்து ஆராதனை நடைபெறும். அதுசமயம் ஏராளமான பக்தர்கள், சமயச் சான்றோர்கள், ஆகியோர் இந்த "பூச்சாட்டு" விழாவீல் கலந்து கொண்டு அன்னை தண்டு மாரியம்மன் அருள் பெறுவது யாவரும் அறிந்ததே.

அக்கினிச்சாட்டு

சித்திரைத் திருவிழாவில் மூன்றாம் நாளன்று அம்மனுக்கு அக்கினிச்சாட்டு விழா நடைபெறும். அன்று மாலை 6.30 மணியளவில் அக்கினிச் சட்டியை அம்மனின் திருமலர் பாதங்களில் வைத்து அக்கினிச் சட்டியில் அக்கினி வளர்க்கப்படும். பின்பு அக்கினிக் கம்பத்திற்கு பூஜை செய்யப்பட்டு மேற்படி கம்பத்தையும், அக்கினிச் சட்டியையும் இத்திருக்கோயில் பூசாரிகள் எடுத்து, கோவிலைச் சுற்றி வலம் வந்து பூச்சாட்டுக் கம்பத்தை எடுத்து விட்டு அக்கினிச்சாட்டு கம்பத்தை நடச் செய்து மேற்படி கம்பத்தின் மூன்று கிளைகளிலும் குழல் ஓடுகளைச் சொருகி அதன்மேல் அக்கினிச் சட்டியை வைப்பார்கள். அக்கினிச் சட்டியில் எரியும் அனல் நெருப்பினில் அன்னையவள் ஜோதி சொரூபியாக அருள்பாலித்து இப்பூவுலகைக் காத்து இரட்சிக்கிறாள். இவ்விழாவின் போது தாரை தப்பட்டைகள் முழங்க, மேளதாளங்களுடன் இப்பெருவிழா சிறப்பாக நடைபெறும்.

திருவிளக்கு வழிபாடு

சித்திரைப் பெருந்திருவிழாவில் நான்காம் நாளான வெள்ளிக்கிழமை மற்றும் எட்டாம் நாளான செவ்வாய்க்கிழமை நாட்களில் நடைபெறும் திருவிளக்கு வழிபாடுகள் மிகவும் பிரசித்திபெற்ற விழாவாகும். இவ்விழா மாலை 6.30 மணிக்கு தொடங்கப்பெறும். இவ்விழாவில் குத்துவிளக்குகளை வரிசையாக வாழையிலையின் மேல் வைத்து ஓதுவார் தீப வழிபாடு மந்திரம் சொல்ல அதை விளக்கின் முன்பாக அமர்ந்துள்ள பெண்கள் திரும்ப உச்சரித்து, 108 அர்ச்சனை மந்திரங்கள் உச்சரித்து விளக்கு பூஜை சிறப்பாக நடைபெறும்.

சக்தி கரக வழிபாடு

சித்திரைத் திருவிழாவில் முக்கியமான

திருவிழா "சக்தி கரகம்" ஆகும். சக்தி கரகத்தன்று காலை 6.00 மணிக்கு கோவை பெரிய கடைவீதியில் அமைந்துள்ள அருள்மிகு கோனியம்மன் திருக்கோயிலில் இருந்து "சக்தி கரகம்" புறப்படும். அதுசமயம் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கையில் தீச்சட்டி ஏந்தி சக்தி கரகத்துடன் பக்தி பரவசத்துடன் வருகை புரிவார்கள். ஆயிரக் கணக்கில் ஆண்களும், பெண்களும் வேண்டுதலினால் விரதமிருந்து தீச்சட்டி எடுத்து வருவது காணக் கிடைக்காத காட்சியாகும். கோவை மாநகரமே அன்று விழாக் கோலமாகக் காட்சியளிக்கும்.

மாலை 6.30 மணிக்கு சிறப்பு அலங்கார ஆராதனை செய்வித்து அம்மனின் உற்சவ மூர்த்தியை அலங்கரித்து அன்னவாகனத்தில் வைத்து இரவு 7.00 மணிக்கு திருக்கல்யாணம் நடைபெறும். இரவு 8.00 மணிக்கு மலர் பல்லாக்கில் அம்மன் திருவீதியுலா சிறப்பாக நடைபெறும்.

தமிழ் முறை இலட்சார்ச்சனை

சித்திரைத் திருவிழாவின் பதினோராம் நாளன்று தமிழ்முறை இலட்சார்ச்சனை மிகச் சிறப்பாக நடைபெறும்.

தமிழ்முறை இலட்சார்ச்சனையன்று மக்களுக்கு எல்லா நலன்களும் அள்ளித்தரும் அம்மனுக்கு அன்னையவள் மனம் குளிர காலை 10.00 மணியளவில் சிறப்பான முறையில் மகா அபிஷேகம் நடைபெறும்.

சங்காபிஷேகம்

திருவிழாவில் இறுதி நாளன்று காலை 7.00 மணிக்கு 1008 "சங்காபிஷேகம்" நடைபெறும். மதியம் 12.00 மணிக்கு அம்மனுக்கு சிறப்பு அபிஷேகமும், அன்னதானமும் மிகச் சிறப்பாக நடைபெறும்.

வசந்த விழா

திருவிழாவில் இறுதிநாளன்று அம்மனின் உற்சவ மூர்த்தியை சிறப்பாக அலங்காரம் செய்வித்து வசந்த மண்டபத்தில் பூஞ்சோலைபோல் பூந்தொட்டிகள் அமைத்து அத்துடன் காய், கனிகளை அழகாகத் தொங்கவிட்டு, மலர்களால் அலங்கரித்து மலர் சோலையில் அன்னை மாரி மகிழ்வுடன் அமர்ந்திருக்க, மத்தளம் முழங்க சிறப்பான முறையில் ஆராதனை நடைபெறும்.

இத்திருவிழாவைக் காணவரும் அடியவர்கள், பக்தர்கள் அனைவருக்கும் அன்னை தண்டுமாரி எல்லா நலன்களும் அளித்து அருள்புரிந்து வருவதால் அனைவரும் இத்திருவிழாவில் கலந்து அம்மன் திருவருள் பெற்று வருவது கொங்கு நாட்டு மக்கள் செய்த புண்ணியம்.

கோவை நகரில் அமைந்துள்ள அம்மன் திருக்கோயில்களில் முதன்முதலாக தங்க ரதம் அமைக்கப்பட்டது இத்திருக்கோயிலில்தான். தங்கத்தேர் புறப்பாடு செய்ய விரும்பும் அன்பர்கள் ரூ. 1,000/- செலுத்தி தங்கத்தேர் புறப்பாடு செய்யலாம். தங்கத்தேர் கட்டளையாக ரூ. 1500/- வைப்பு நிதியாக செலுத்தி விரும்பும் தேதியில் ஆண்டுக்கு ஒருநாள் தங்கத்தேர் புறப்பாடும் செய்யலாம்.

பொது ஆவுடையார்

இறைவன் எங்கும் நிறைந்துள்ளவன். அவன் இல்லாத பொருள் இல்லை. எல்லாப் பொருளிலும் எல்லாமுமாய் எல்லா நிலையிலும் நீக்கமற நிறைந்துள்ளான்.

ஆனாலும் ஓரிடத்தில் மனதை நிலைப்படுத்தி ஊரின் பொதுவிடமாக, மையப்படுத்தி அனைவரும்கூடும் வகையில் கருவறையும், மண்டபமும் மதில்சுவரும் கட்டினர். அதன் விளைவாக வானுயர்ந்த கோபுரங்களும், கற்கோயில்களும், குடைவரைக் கோயில்களும் தோன்றலாயின.

இத்தகைய பெருங்கோயில்கள் தோன்றுவதற்கு முன்னால் பஞ்சபூதங்கள், முனிவர்கள் வசித்த நதிக்கரை, மரத்தடி ஆகியவற்றை வழிபட்டனர்.

மரத்தையும் அவ்வகையில் வழிபட்ட வகையில் மரத்தடியிலேயே கோயில்கள் கட்டப்பட்டன. அத்தகைய முறையில் மரத்தடியில் கட்டப்பட்ட கோயில்களுக்கு அம்மரங்கள் தல விருட்சங்கள் எனப் பெயர் பெற்றன.

அந்தத் தல விருட்சங்களை வழிபடும் வழக்கம் இன்றும் நமது தமிழ்நாட்டில் உள்ளது.

ஆனால், தலவிருட்சமே தெய்வசந்நிதானமாக வழிபடப்படும் தன்மை தஞ்சை மாவட்டத்தில் பரக்கலக்கோட்டை என்ற ஊரில் உள்ளது.



பட்டுக்கோட்டை, முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி பேருந்து வழித்தடத்தில் அமைந்துள்ளது பரக்கலக்கோட்டை என்னும் கிராமம் ஆகும்.

இந்த ஊரில் உள்ள வெள்ளால மரமே பலரால் இன்றளவும் தில்லையம்பலவாணன் கூடத்தில் நின்று உலகுக்கு உண்மையை உபதேசித்த தலமாக கருதப்பட்டு வணங்கப்படுகிறது.

அந்த மரத்தின் முன்புறம் இரண்டு திருவடிகள் உள்ளன. மரத்தில் சந்தனம் பூசப்பட்டு, அதன் மீது நாசி, கண்கள், புருவம், வாய் முதலானவை பொருத்தப்பட்டு முன்புறம் பிரபை சார்த்தப்பட்டுள்ளது. அந்த மரத்தினைச் சுற்றிச் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. இதுவே கருவறையாக விளங்குகிறது. அதன் எதிரே நந்திதேவர் அமர்ந்திருக்கின்றார். அம்பாளுக்கென தனிச்சந்நிதி இல்லை.

அதன் முன்புறம் மகாமண்டபமும் அதற்கு முன்புறம் முன்மண்டபமும் உள்ளன.

கார்த்திகை சோமவாரம் 4 நாட்களும் இத்திருக்கோயிலுக்கு பக்தர்கள் ஏராளமாக வருகை தருகின்றனர்.

இத்திருக்கோயில் அருள்மிகு மத்யபுரீஸ்வரர் திருக்கோயில் எனவும், அருள்மிகு பொது ஆவுடையார் திருக்கோயில் எனவும் வழங்கப்படுகிறது.

புராண நாட்களில் பல முனிவர்களில், வான்கோபர், மகாகோபர் என்னும் இரு முனிவர்களுக்குள்ளும் தர்க்கம் ஏற்பட்டது. பரம்பொருளான இறைவனைச் சென்றடைய இல்லறமே நல்வழி என வான்கோபரும், துறவறமே, நல்வழி என மகாகோபரும் மீண்டும் மீண்டும் விவாதித்து இறுதியில் வார்த்தைகளே மிஞ்சின. முடிவுக்கு இருவரும் வரவில்லை.

இறுதியில் தில்லையம்பலவாணனிடம் முறையிடுவது என முடிவு செய்து இருவரும் தங்களது தர்க்கங்களை இறைவனிடம் எடுத்து வைத்தனர்.

தில்லையம்பல வாணனோ "தெற்கே பொய்கைநல்லூர் எனுமிடத்தில் ஒரு வெள்ளால மரம் உள்ளது. அதனருகில் உறங்கு புளி, உறங்காபுளி என்னும் இரு புளிய மரங்கள் உள்ளன. நீங்கள் அங்கு சென்று காத்திருங்கள். நான் அங்குவந்து உங்களுக்குத் தீர்ப்பளிப்பேன்" என்று கூறினார்.

முனிவர்களும் பொய்கை நல்லூரில் இருந்த இரு புளிய மரங்களின் கீழிருந்து தீர்ப்புக்காகக் காத்திருந்தனர். புளி காயாக இருக்கும்போது ஓடுடன் ஒட்டியிருக்கும். பகுத்தால் சதையும் ஓடும் தனியாகும். பழம் அறிவு முதிர்ச்சிக்கும் ஞானத்திற்கும் அடையாளம். இதை உணர்த்தவே புளிய

இரா. இரகுநாதன்

மரத்தடியில் நிற்கக் கூறினார்.

தில்லையில் இருந்த நடராசப் பெருமான், திங்கட்கிழமை இரவு தில்லையில் நள்ளிரவு பூஜை முடிந்தபிறகு தம் பரிவாரங்களுடன் பொய்கைநல்லூர் வந்தார். வெள்ளால மரத்தடியில் கால் தோய நின்றார்.

இருவரது கருத்தையும் கேட்ட இறைவன் இல்லறமும் துறவறமும் நெறிமுறை வழுவாமல் உண்மையான ஒருமித்த மனஉறுதியுடன் மேற்கொண்டு ஒழுகினால், இரண்டும் சிறப்புடையது. உயர்ந்ததும் இல்லை. தாழ்ந்ததும் இல்லை எனப் பொதுவாகத் தீர்ப்பளித்தார். இருவருக்கும் இடையில் மத்யஸ்தம் செய்து வைத்தார்.

மத்யஸ்தம் செய்து வைத்ததால், மத்யபுரீஸ்வரர் எனவும், பொதுவாக இவ்வுலகையே ஆவுடையாராகக் கொண்டு லிங்க ரூபத்தில் காட்சி தந்ததால், பொது ஆவுடையார் எனவும் பெயர் பெற்றார்.

அன்று முதல் தென்சிதம்பரம் என்ற பெயரும் இவ்வூருக்கு வழங்கலாயிற்று.

அந்நியர் படையெடுப்பிலும் ஆட்சிகள் மாற்றத்தாலும் இத்திருக்கோயில் புகழ் வெளித் தெரியாமல் இருந்தது.

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு கோயில் இருந்த வெள்ளால மரப் பகுதி வனத்தின் ஒரு பகுதியாக இருந்தது. கூடைபின்னும் தொழில் செய்வோன் பிரம்பு அறுக்கும்போது அவனது கத்தி, கை தவறி அருகில் உள்ள வெள்ளால மரத்தில் பட்டதும், அம்மரத்திலிருந்து குருதி வெளிப்பட்டது. அவனது கண்பார்வை ஒளி போயிற்று. திகைப்பூண்டை மிதித்தவனாய் எங்கும் செல்லாமல் அங்கேயே அமர்ந்துவிட்டான்.

பார்வையிழந்ததால் அங்கிருந்துஎங்கும் செல்லாமல் அமர்ந்தவனைத் தேடி நள்ளிரவில் ஊராரும் உற்றாரும் மனைவியும் தேடி வந்தனர். அங்கே குருடாகி அவன் அமர்ந்திருப்பதையும் குருதி மரத்திலிருந்து வழிவதையும் கண்ட மக்கள் திகைத்து நின்றனர்.

சாமியாடி அருள்நிலை பெற்ற ஒருவர், அவ்விடத்தில் தில்லைச் சிற்றம்பலவாணன் வெள்ளால மரத்தில் குடிகொண்டிருப்பதையும், சோமவாரத்தில் 2ஆம் சாமத்தில் அங்கு அந்த மரத்தில் உறைவதையும், அந்நேரத்தில் வணங்குவார்க்கு சகல நலனும் கிடைக்கும் எனக்கூறி தன்னிலை அடைந்தார்.

அதன் அடிப்படையில் ஒவ்வொரு, சோமவாரமும் 2ஆம் ஜாம பூஜை மட்டும் இத்திருக்கோயிலில் நடத்தப்படுகிறது. மற்ற நாட்களில் பூஜை எதுவும் கிடையாது.

அந்நாட்கள் மட்டும் இல்லாமல், கார்த்திகை சோம வாரத்தன்று 4 வாரமும் மிகச் சிறப்பானதாகக் கருதப்படுகிறது.

இத்திருக்கோயிலில் தலமரமே மூர்த்தியாகவும், விருட்சமாகவும் விளங்குகிறது. இது வெள்ளால மரம் எனப்படுகிறது. இது மென்மையும் தன்மையும் கொண்டது. இம்மரத்தில் இருந்து உதிரும் இலையை பூஜை அறையிலும், தானியக் குதிர்களிலும், பணப்பெட்டிகளிலும் வைக்க வளம் பெருகும் என்ற நம்பிக்கையில் பொதுமக்கள் இவற்றை எடுத்துச் செல்கின்றனர்.

இத்திருக்கோயிலில் தினசரி பூஜை கிடையாது. ஒவ்வொரு திங்கட்கிழமையும் இரவு 12.00 மணியளவில் மட்டுமே வழிபாடு நடத்தப்படுகிறது. மற்ற நாட்களில் நடை திறக்கப்படுவதில்லை. இறைவன் சிதம்பரத்தில் சோமவாரத்தில் நள்ளிரவு பூஜை முடிந்த பின்பு தன் பரிவாரங்களுடன் இங்கு எழுந்தருள்வதாக ஐதீகம்.

இரவு 10.30 மணிக்கு பெரிய மணியும், 11.00 மணிக்கு நடைதிறந்து நந்திதேவர், பரிவார பூஜை நடந்து மூலவர் பூஜை நடைபெறும்.

பொது ஆவுடையாருக்கு அபிஷேகம் செய்து தூப தீப நெய்வேத்திய ஆராதனை நடந்து நிவேதனம் நடத்தி, தமிழ் மந்திரங்கள், திருமுறைகள், வடமொழி ஆகம மந்திரங்கள் ஓதப்படுவது நடைமுறையில் உள்ளது.

விடையாற்றித் திருவிழா மார்கழி முதல் சோம வாரத்திலும், தைமாதம் பொங்கல் திருவிழாவும் கொண்டாடப்படுகின்றன.

3, 4வது சோமவாரங்கள் மிகப் பிரசித்தி பெற்ற நாட்களாகும்

இறை வழிபாடு

நினைவலைகள்



அருண்மொழியரசு
திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள்

எங்கும் நிறைந்தவன் இறைவன். இறை என்ற சொல் 'இறு' என்ற பகுதி அடியாகப் பிறந்தது. சரம் அசரம் என்ற எல்லாப் பொருள்களிலும் தங்கியிருப்பவன் இறைவன்.

**"பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற
நிறைகின்ற பரிபூரணானந்தமே"**

**"அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்தபூர்த்தியாகி அருளொடு நிறைந்தது"**

உடம்பிலே உயிரும் உயிரிலே இறையும் தங்கியிருக்கின்றன. உதை பந்து - பந்துக்குள் "பிளாடர்": அதற்குள் காற்று என்பது போல், எல்லாப் பொருள்களையும் எல்லா உயிர்களையும் இயக்குகின்றதனால் அப்பரம் பொருள் இயவுள் எனப்பேர் பெற்றது. "பெரும் பெயர் இயவுள்" என்பார் நக்கீரர். எல்லாவற்றையும் கடவுவதனால். கடவுள் எனவும் பேர் பெற்றது.

ஒரு மருத்துவமனையில் மருத்துவர் தங்கியிருப்பதன் நோக்கம், அம்மருத்துவமனையில் உள்ள பிணியாளர்களின் பிணிகளைப் போக்குவதேயாகும். அதுபோல், இறைவன் எல்லா உயிர்களிலும் தங்கி அவ்வுயிர்களின் பிறவிப் பிணியைப் போக்குகின்றான்.

**"உள்ளொடு புறங்கீழ் மேலாய்
உயிர்தொறும் ஒளிந்து நின்ற கள்வன்"**

என்பார் பரஞ்சோதி முனிவர்.

**அண்டமும் அளவிலாத உயிர்களும்
ஆகமாகக் கொண்டவன்**

என்பதும் அவர் திருவாக்கு.

இன்னணம் இறைவன் எங்கும் இருப்பினும் ஞானிகள் திருவுள்ளத்திலும் திருக்கோயில்களிலும் சிறப்பாக விளங்கித் தோன்றுகின்றான். ஏனைய இடங்களில் இறைவன் மறைந்திருக்கின்றான்

'ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியானே'

- மாணிக்கவாசகர்.

பாலில் நெய் மறைந்திருப்பதுபோல், பிற இடங்களில் இறைவன் நிறைந்து மறைந்திருக்கிறான். கடைந்த தயிரில் வெண்ணெய் திரண்டு உருண்டு வெளிப்பட்டிருப்பது போல், ஞானிகள் உள்ளத்திலும், திருக்கோயிலிலும் இறைவன் விளங்கிக் காட்சியளிக்கின்றான்.

மற்ற இடங்களில் இறைவனை நாம் நினைந்து தியானிப்பதனாலும் துதிப்பதனாலும் வழிபடுவதனாலும் வினைகள் வெதும்புகின்றன. கோயிலில் இறைவனை வழிபட்டால் வினைகள் வெந்து எரிந்து கரிந்து நீராகி விடுகின்றன.

கொடிய வெயிலில் ஒரு துணியை வைத்தால், அத்துணி, வெதும்புமேயன்றி வெந்து சாம்பலாகாது. சூரியகாந்தக் கண்ணாடியை வெய்யிலில் வைத்து அதன்கீழ் வரும் மற்றொரு வெய்யிலில் துணியை வைத்தவுடனே அத்துணி சாம்பலாகி விடுகின்றது. நேர் வெய்யிலுக்கு இல்லாத ஆற்றல், சூரியகாந்தக் கண்ணாடியின் கீழே வருகின்ற வெய்யிலுக்கு உண்டு.

பரந்து விரிந்து இருக்கின்ற கதிரவனுடைய வெப்பத்தை ஒன்றுபடுத்தித் தன் கீழே சூரியகாந்தக் கண்ணாடி பாய்ச்சுகின்றது. பிற இடங்களில் இறைவனை வழிபடுவது, வெய்யிலில் வேட்டியை வைப்பது போலாகும். திருக்கோயிலில் இறைவனை வழிபடுவது சூரியகாந்தக் கண்ணாடியின் கீழே வைப்பது போலாகும். ஆதலால், திருக்கோயில் வழிபாடு இன்றியமையாததாகும்.

**"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"**

என்பது சிவஞான போதம்.

திருக்கோயில்களில் உள்ள திருவுருவங்கள் தேவர்களாலும், முனிவர்களாலும், நால்வர், ஆழ்வார்கள் ஆகிய ஆன்றோர்களாலும் நிறுவப் பெற்ற காரணத்தால் அவை மேன்மை பெற்று வழிபடுவோருடைய வல்வினைகளையகற்றி, வேண்டிய வரங்களை வழங்கி அருள் புரிகின்றன.

பசுவின் உடல் முழுவதும் பால் பரவியிருப்பினும் மடியின் மூலமாக அதனைப் பெறுவது போல், எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனுடைய திருவருளைத் திருக்கோயில்களில் உள்ள திருவுருங்கள் மூலமாக நாம்பெறுதல் வேண்டும்.

ஒரு பறவை இரு சிறகுகளைக் கொண்டு பறப்பது போல், இறை வழிபாட்டிற்குப் பூவும் நீரும் வேண்டப்படுகின்றன.

"புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்"

என்பது திருமந்திரம். எங்கும் நிறைந்த இறைவனை, எங்கும் எளிதாகக் கிடைக்கக்கூடிய பூவினாலும், நீரினாலும் நாம் வழிபட வேண்டும். வழிபாட்டிற்கு அன்பும், ஆசாரமும் இரண்டு கண்கள் போன்றவை.

"அன்புடன் ஆசார பூசை செய்து
உய்ந்திட வீணாள் படாது அருள்புரிவாயே"

என்று அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்.

திருக்கயிலாய மலையில் பார்வதி பரமேசுவரர் மீது விளையாட்டாக வில்வக் கிளையை உதிர்த்த குரங்கு அபுத்தி பூர்வதமாகச் செய்த அச்சிவ புண்ணியத்தால் பூவுலகிற் பிறந்து, முசுகுந்தச் சக்கரவர்த்தி என்ற பெயருடன் மூவுலகும் ஆண்டது.

"வில்வக் கிளையுதிர்த்த வெய்ய முசுக்கலையைச்
செல்வத் துரைமகனாய்ச் செய்தனையே"

- திருவருட்பா

இறைவழிபாடு செய்து மார்க்கண்டேயர் மறலியை வென்ற வரலாறு உலகம் அறிந்த ஒன்று.

கோயில் ஐந்து பிரகாரங்களோடு கூடியது. இந்த உடம்பே இறைவன் இருக்கின்ற திருக்கோயில். இந்த உடம்பும் அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என்ற பஞ்ச கோசங்களையுடையது.

உடம்பில் 32 கட்டுக்களோடு கூடிய முதுகந் தண்டே, திருக்கோயிலில் கொடிமரமாகக் காட்சியளிக்கிறது. கொடிமரத்தில் கொடி ஏறியவுடன் இறைவன் வெளியே வந்து காட்சியளிக்கின்றான். அதுபோல், முதுகெலும்பாகிய வீணா தண்டத்தில் வளைந்து செல்லுகின்ற சுழுமுனை என்ற வெள்ளை நரம்பின் வழியாகப் பிராணவாயு ஆறாதாரங்களையுங் கடந்து, பிரமாந்திரத்தைத் தாண்டி சகஸ்ரார வெளியிலே சென்றவுடன் சிவசோதி காணப்படும்.

திருக்கோயிலில் விளங்கும் பத்திர இலிங்கமாகிய பலி பீடம் பாசத்தையும், நந்தி தேவர் பசுவையும், சிவலிங்கம் பதியையும் குறிப்பிடுகின்றன.

நமது சாரீரத்தில் உள்ள மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், ஆநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களையும் கோயிலில் உள்ள யாக மண்டபம், அலங்கார மண்டபம், கல்யாண மண்டபம், நிருத்த மண்டபம், மகா மண்டபம், அர்த்த மண்டபம் என்ற மண்டபங்கள் தெரிவிக்கின்றன. எனவே, திருக்கோயிலில் சென்று இறைவனை வழிபட்டு, அங்கே கண்ட பரம்பொருளை நம் உடம்புக்குள்ளேயும் கண்டு மனோலயம் பெற வேண்டும்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே

- திருமந்திரம்

கட்டையில் கனல் மறைந்திருக்கின்றது. "விற்கிற தீயினன்" என்கின்றார் அப்பர் பெருமான். கட்டையைக் கடைந்தவுடன், அதில் மறைந்த கனல் வெளிப்பட்டுக் கட்டை கனலாகக் காட்சியளிப்பது போல், உயிரில் ஒளிந்திருக்கின்ற இறைவனை ஞானத்தால் கடைவோமாயின், சிவம் வெளிப்பட்டுச் சீவனைச் சிவமாக்கிக் கொள்கிறது.

எண்ணில் காலமாக எண்ணில்லாத உடம்பு எடுத்து வருகின்ற நாம் இறைவனை மெய்யன்புடன் உள்ளம் குழைந்து உருகி மலரிட்டு அருச்சனை செய்து வழிபட்டால் பிறவி நோய் தீரும்.

கன்றெடுத்து விளவெறிந்து
காலெடுத்த மழைக்குடைந்த காலிகாக்கக்
குன்றெடுத்த மால்விடையின்
கொடியெடுத்து வடிவெடுத்துக் கூறொனாத
மன்றெடுத்த சேவடியின் மலரெடுத்துச்
சாத்தியன்பின்வழிபட் டோர்கள்
இன்றெடுத்த வுடற்பிறவி யினியெடா
வண்ணமெண்ணம் எய்து வாரே

- சிவரகசியம்

பரமனடி பாடும் பாவையர் நோன்பு

சைவப் பெருநூல்களுள் திருவாசகம் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த நூல். மாற்று மதத்தினரையும் மனங்கரையச் செய்யும் மகத்தானதொரு தெய்வத்தமிழ் நூல். சிவபெருமானே இந்நூலைத் தன் தனிமைக் காலத்திற்கு வேண்டுமெனக் கருதி எழுதி வைத்துக் கொண்டதாக இந்நூலின் சிறப்பை மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை அவர்கள்,

"கடையூழி வருந்தனிமை கழிக்கஅன்றோ
அம்பலத்துள்
உடையாருன் வாசகத்தில் ஒரு பிரதி
கருதினதே"

எனத்தம் நாடகத்தின் தமிழ் வணக்கத்தில் பாடியுள்ளார். இந்நூலின் தெய்வீக அருமை கருதியே "திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார்" என்ற பழமொழியும் நாட்டில் தோன்றியது.

பன்னிரு திருமுறையுள் எட்டாந் திருமுறையான இந்நூல் ஒன்றே திருக்கோவையார் என்ற தெய்வத்தமிழ் நூலையும் துணையாகப் பெற்றுள்ளது. இவ்வுண்மையை ஒரு தனிப் பாடல் "கோவை திருவாசகமும்" என்ற தொடரால் கூறியுள்ளதிலிருந்து உணரலாம்.

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

இத் தனிப் பாடலில் திருவாசகத்திற்கு அடைமொழிபோல் கோவை என்ற சொல் வந்ததாயினும் அது "கோவையைச் சார்ந்த" என்ற பொருளைத் தருவதால் திருவாசகத்தின் துணை நூல் திருக்கோவையார் என உறுதிப்படுகிறது. மேலும் திருவாசகத்திற்குப் பின் தோன்றியதை முந்திக் கூறுவானேன் என்றால், பாடலின் எதுகைக்காகக் கூறப்பட்டாலும் நேற்று பிறந்த காதை விட இன்று பிறக்கும் கொம்பு வலுவுடையது போலத் திருவாசகத்தின் உள்ளடக்கமான செய்திக்குத் திருக்கோவையார் ஒரு விளம்பர நூல் என்பதால் முன்னர் கூறப்பட்டது எனலாம்.

திருவாசகத்தின் உள்ளடக்கம் யாதெனில் **"இறைவன் மாதொரு பாகத்தினன்"** என்பதேயாம். இக்கருத்து உலகியல் சார்ந்த ஒரு தத்துவ உண்மையாகும். உலக இயக்கம் ஆண் பெண் கூட்டுறவால் நடைபெறுகிறது. இவ்வுலக இயற்கையையே இறைவன், ஆண் பாதி பெண் பாதியாகத் (அர்த்தநாரி) தன்னை அடையாளப்படுத்திக் கொண்டான். இத்தோற்றத்திற்கான காரணம் யாதெனில் இல்லறம் அல்லது நல்லறமன்று என்பதை உணர்த்துதற்காம் என்பது வெளிப்படையான கருத்து இதைத்தான் மணிவாசகர் திருச்சாழல் பாடலில்,

"தென்பால் உகந்தாடும் தில்லைச்
சிற்றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன்
காணேடீ!
பெண்பால் உகந்திலனேல் பேதாய்!
இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி வீடுவர்காண்
சாழலோ!"

எனப்பாடினார். இப்பாடலில், இறைவன் சிவமும் சத்தியுமாய் இருந்து உயிர்களை இயக்காவிடில் உயிர்கள் ஆணும் பெண்ணுமாய் இன்பந்துய்க்க மாட்டா என்ற கருத்து வெளிப்படையாகப் பதிவாகியுள்ளது. அவளால் வந்த ஆக்கம் இல்வாழ்க்கை என்ற சிவஞான சித்தியார் கருத்தின்படி ஒத்த உணர்வுடைய ஆணும் பெண்ணும் இணையும் இல்லறமே உலக இயக்கத்திற்கும் தோற்றத்திற்கும் காரணம் என்பதால் இல்லறத்திற்கான இவ்இருவரைத் தயார் படுத்தும் தெய்வீகத்தைத் திருவாசகம் குறிப்பாகக் கூறத் திருக்கோவையார் வெளிப்படையாக உணர்த்துகிறது என்பதாம்.

திருவாசகம் முழுவதும் இறைவன், இல்லறத்திற்கு அடையாளமான மாதொரு பாகனாகக் காட்சியளித்தாலும் திருவெம்பாவை

தமிழாகரர் தெ. முருகசாமி
புதுச்சேரி

என்ற பகுதி மட்டும் அதன் மாண்பைத் தனித்துக் கூறும் சிறப்புடையதாக உள்ளது. திருவாசகத்தின் 51 பிரிவான தலைப்புகளில் பெண்பாற் பாடல் பிரிவுகளாக, திருவம்மானை, திருவெம்பாவை, கோத்தும்பி, பொற்சுண்ணம், தெள்ளேணம், திருச்சாழல், பூவல்லி, திருவுந்தி, தோள்நோக்கம், பொன்னூசல் எனப் பத்துப் பிரிவுகள் உள்ளன. அவற்றுள் திருவெம்பாவையை மட்டும் சிவபெருமான் விரும்பியுள்ளான். பாவைபாடிய வாயால் கோவை பாடுக எனச் சிவபெருமானே விரும்பிக் கேட்டதாகக் கூறுவர். ஒன்பது பெண்பாற் பாடல்கள் இருக்க திருவெம்பாவையை மட்டும் சிவன் விரும்புவானேன் என்பதை மிக நுட்பமாக உணர்ந்தால், திருவாசகத்திற்குத் துணை நூலாகத் திருக்கோவையார் என்ற நூல் உருவானதன் உண்மை தெற்றெனப் புலப்படும்.

பிற பெண்பாற் பாடல்களில் பெண்கள் கூட்டாக இருந்து ஒருவரை ஒருவர் புரிந்து கொண்ட நிலையில் விளையாடுவதாக உள்ளன. திருவெம்பாவை அவ்வாறாக இல்லாமல், தூக்கத்திலிருந்து விழிப்படைந்த ஒருத்தி, தூக்கத்தில் இருக்கும் எட்டு பெண்களை ஒவ்வொருவராக எழுப்பிக் கொண்டே ஒன்பது பேரும் ஒன்று கூடி நீராடி சிவானுபவத்தில் திளைப்பவராகக் காட்சியளிக்கின்றனர். மேலும் இறைவனிடம் விண்ணப்பம் ஒன்றினைக் கூறி அதை நிறைவேற்றித்தர வற்புறுத்தும் பாடல்களாகவும் உள்ளன. இதனால் உரையும் பாட்டும் விரவிய நாடகப் பாங்கான தனித்தன்மை திருவெம்பாவைக்கே உரியதாகத் தெரிகிறது. இன்னும் சிறப்பாக நோக்கினால், இப்பாடல் பாவை நோன்பு நோற்பதற்குரிய மார்கழி என்ற மாதத்தைக் குறிப்பிட்டுக் கூறுவது போல ஏனைய பெண்பாற்பாடல்கள் எந்த மாதத்தையும் காட்டாதது திருவெம்பாவைக்கே உரிய தனித்தன்மையாகும்.

பாவைப்பாடல்களில் பெண்கள் வைக்கும் விண்ணப்பமும் ஒரு வித்தியாசமானதாகும். நாடு செழிக்க மழையை வேண்டுவதோடு தமக்கு நல்ல கணவர்கள் அமைய வேண்டுமென்றும் விண்ணப்பித்த பாங்குபோல் பிற பெண்பாற்பாடல்கள் அமையவில்லை. மேலும் முப்புரம் எரித்தது, யானைத் தோல் உரித்தது, ஆலகால விடம் உண்டது போன்ற புராணக் கதைப் பாங்கைத் திரும்பத் திரும்பக் கூறும் பிற பெண்பாற் பாடல்களைப் போலத் திருவெம்பாவைப் பாடல்களும் கூறினாலும் ஆண்டவனை அடியார்கள் மூலம் அனுபவிப்பதாகப்பாடும் தனித்தன்மை திருவெம்பாவைக்கே உரியதாகும். தேனாய், இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான் என ஆண்டவனை மணிவாசகர் அனுபவித்தாலும் உலகியலார் அவ்வாறு நேரிடையாக அனுபவிக்காமல் அடியார்கள் மூலம் அனுபவிப்பதாகக் கூறுவது தான் நோக்குதற்குரிய கருத்தாகும். உலகியல் நியதிப்படி எந்த ஒன்றையும் நேரிடையாக அனுபவிப்பதை விடச் சற்று மாற்றுப் பொருளுடன் சேர்த்து அனுபவிப்பது தான் சிறப்பாகும்.

இனிக்கும் பொருளான சீனியை இனிப்புப் பண்டமாகக் கொள்வதில்லை. அதனைச் சில மாவுப் பொருள்களுடன் சேர்த்து இனிப்புப் பண்டமாக (இலட்டு, ஜாங்கிரி) ஆக்கிச் சுவைக்கும் போது அதன் சுவையும் மணமும் பெயரும் மாறியதொரு பொருளாகும் தன்மைபோல ஆண்டவனை நேரிடையாக அனுபவிப்பதை விட அடியார் மூலம் அனுபவிப்பதே உயர்வு என்கிறது திருவெம்பாவை. இதனால் ஆண்டவனை விட அடியார்கள் மிக உயர்ந்தவர்கள் எனத் தெரிகிறது. ஏனெனில், அடியார்களுக்கு ஆண்டவனைப் பற்றிய ஒரு சிந்தனை மட்டுமே உண்டு. ஆனால் ஆண்டவனுக்கோ பல தரப்பட்ட உலக உயிரினங்களை ஆட்கொள்ளுதலில் உள்ள கவலையும் அக்கறையும் பலவாகும் என்பதால் அவன் ஒரு நிலைப்படாதவன் என்ற கருத்தின்படி அடியாரினும் ஆண்டவன் அவ்வளவு எளிதாக அனுபவப் பொருளாக ஆக மாட்டான் என்பது உண்மையாகும். எனவே பாவைப் பாடல்கள் அடியார்களை அனுபவிக்கும் தரத்தைக் கூறும் பாடல்களாகவே மணிவாசகர்களால் பாடப்பட்டன. இப்பேருண்மையைக் கீழ்வரும் இரு பாடல்கள் மெய்ப்பிக்கின்றன.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்
பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் போர்த்தும்அப்
பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே
பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய் பணி
செய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய்"(9)

என்றும்,

"உங்கையிற் பிள்ளை உனக்கே
அடைக்கலமென்று
அங்குஅப் பழம்சொல் புதுக்குமெம்
அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்று
உரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள்
சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும்
காணற்க
இங்கு இப்பரிசே மெக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழில் என் ஞாயிறு மெக்கேலோ
ரெம்பாவாய்" (19)

என்றும் கூறும் இருபாடல்கள், தங்கட்குக்

கணவராக வரப் போகிறவர்கள் ஆடவர்க்கான அங்க அடையாளங்களால் மட்டுமே கணவர் ஆவதற்கான தகுதியைப் பெற்றவரில்லை என்பதைப் பெண்களே தீர்மானித்துரைப்பதாக அமைந்துள்ளன. இறைவன் மீது தங்களுக்குள்ள பக்தியைப் போலத் தமக்குக் கணவராக வருபவர்க்கும் பக்தி இருக்க வேண்டும் என்பதுதான் இல்லறம் நல்லறமாக நடப்பதற்கான அடித்தள உண்மை என்பதைப் பெண்கள் தீர்மானிப்பதை இவ்விருப் பாடல்களும் உணர்த்துகின்றன எனலாம்.

ஒத்த உணர்வில்லாதவரின் வாழ்க்கை, "குடங்கருள் பாம்பொடு உடன் உறைவதாக" வேறுபட்டுத் தெரியும் என்பதால் ஒத்த உணர்வுடையவர்கள் இணைவதே வாழ்க்கையின் சிறப்பு என்பதே பெண்களின் வேண்டுதலாக அமைந்தன. முன்பின் அறியாதவருடன் வாழ்க்கைப் படும்போது நம்மைப் போன்ற மனம் அடுத்தவருக்கும் இருக்குமோ என்ற நெருடலான உணர்வு இருக்கவே செய்யும். அந்த நெருடலைத்தான் பெண்கள் "புதுக்கும் எம் அச்சம்" என்பதாகக் கூறினர். இந்த அச்சத்தைப் பெண்கள் ஆண்டவன் சந்நிதியில் அடைக்கலப்படுத்திக் கொள்வதன் மூலம் தன்கடன் அடியேனையும் தாங்குதல் என்ற அப்பரடிகள் வாக்குக்கேற்பத் தம்மைக் காக்கும் பெரும் பொறுப்பை ஆண்டவனிடம் ஒப்படைத்து விட்ட நிம்மதியில் "என்ன குறை" என்றும் "எங்கெழில் என் ஞாயிறு" என்றும் கவலை நீங்கியவர்களாகக் காணப்படுகிறார்கள். எனவே இதுபோன்ற உறவும் உரிமையுமான கருத்துச்சிறப்பு பிற பெண்பாற் பாடல்களில் இல்லை என்பதால் திருவாசகத்தில் திருவெம்பாவை குறிப்பிடத் தகுந்த பிரிவாக உள்ளது.

இப்படி வெளிப்படையாகத் தெரியும் இல்லறப்பாங்கான உண்மைக்கு மேலாக இப்பாவைப்பாடலைச் சக்தியை வியந்தது என்ற தத்துவார்த்தமாக உணர்த்துவர் ஆன்றோர். தூங்கிய பெண்ணைத் தூங்கி விழித்தவள் எழுப்புகிறாள். **"விழிப்படைந்த ஆன்மாவே விழிப்படைய வேண்டிய ஆன்மாவுக்கு வழிகாட்டி"** என்பதே தத்துவ உண்மை. இத்தத்துவ உண்மையைச் சிவஞான முனிவர் "வினையின் நீக்கி விளக்கப்படும் உயிரினங்களுக்கு வினையின் நீங்கி விளங்கிய அறிவினையுடையவன்தான் உணர்த்துவான்" எனக் கூறியுள்ளார். இந்த அடிப்படையில் உணர்த்த உணர்ந்த பெண்கள் தங்களை ஆண்டவனிடம் அடைக்கலப்படுத்திக் கொள்ளும் தெளிவால் தம்மை ஒத்த பக்தி உடையவர்களின் உறவை உரிமையுடன் வேண்டினர் என்பதே திருவெம்பாவையின் உட்கருத்தாகும்.

இதே அடிப்படையில் மானுடக்காதலை வெளிப்படையாகவும் ஆன்மிகக் காதலைக் குறிப்பாகவும் உணர்த்தும் திருக்கோவையார்க்கும் ஒரு தத்துவப் பார்வையை ஆன்றோர் வரையறுத்துள்ளனர். தலைவனைத் தலைவியடைந்து இன்புற முயற்சித்தலை, இறைவனை உயிர் அடைந்தின்புறுதல் போலவும் தலைவன் தலைவியை அடையப் பலவாறு சந்தித்தவை, இறைவன் உயிர்கள் உய்யும் பொருட்டு இரங்கி வந்து ஆட்கொள்வது போலவும் திருக்கோவையார் நூலுக்குத் தத்துவம் கூறுவதுண்டு.

மேலும் யான் எனது என்ற செருக்கற்ற ஆன்மாவே ஆண்டவனை அடையும் என்பது தத்துவார்த்த உண்மை. அதாவது தன்முனைப்பாகிய "நான்" நீங்கினால் இறையின்பம் கிட்டும் என்பர். இக்குறிப்பையே திருவெம்பாவையின் அடைக்கலப் பாடல் உணர்த்தியது போலத் திருக்கோவையாரின் பாடல் எண்ணிக்கையான "நானூறு" என்ற சொல் உணர்த்துகிறது எனலாம். நான் நூறு என்ற சொற்பிரிப்பில், நான் என்ற தன்முனைப்பான குணம் நூறவேண்டும் என்பது கருத்தாக உள்ளது. நூறு என்பது அழிவைக்குறிக்கும். எனவே தற்போதம் அழிந்த ஆன்மாவே ஆண்டவனை அடையும் என்பது தான் பாவைப் பாடலுக்கும் திருக்கோவையாருக்கும் சாரமான கருத்தாகும்.

இப்படி நானூறு என்ற எண்ணால் உணர்த்திய திருக்கோவையாரின் இறுதியை அதாவது நானூறாவது பாடலின் இறுதிச் சீரைத் திருவாசகத்தின் தொடக்கமாகிய "நமச்சிவாய" என்ற முதல் சீரோடு தொடர்புபடுத்தினால் தற்போதம் அடங்கிய ஆன்மாவுக்கான ஊதியம் எது? என்பதை உணரலாம்.

"காரணி கற்பகங் கற்றவர்
நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தா மணியணி
தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் தக்கோர்
தஞ்சங்க நிதிவிதி சேர்
ஊருணி உற்றவர்க்கு ஊரன்மற்
றியாவர்க்கும் ஊதியமே."

நமச்சிவாய என்பது திருவாசகத் தொடக்கம். ஊதியமே என்பதே திருக்கோவையாரின் இறுதி. இவ்விரண்டையும் சேர்த்தால் "நமச்சிவாய ஊதியம்" என்ற தொடர், தற்போதம் அடங்கிய ஆன்மா நமச்சிவாய மந்திரமாகிய ஊதியத்தால் கடைத்தேற்றம் அடையும் என்பதை உணர்த்துவது போல் உள்ளதை உணரலாம். இவ்இயைபான தொடர்க் குறிப்பைப் பரிசுத்த ஆன்மாவாகிய தலைவி வாலறிவனாகிய இறைவனோடு ஐக்கியப் படுதற்கான உபதேசம் எனலாம். ஆக பரமனோடு கொண்ட பாவையரின் பக்தி உறவே, ஆன்மாவின் அடையாளம் என்பதும் இவ்வடையாளமே ஆண்டவனோடு ஆன்மா இரண்டறக் கலப்பதற்கான உரிமம் என்பதும் பாவையும் கோவையும் உணர்த்தும் இல்லற நோன்பின் மகத்துவம் எனலாம்.

அனந்தாழ்வான் (அரவரசன்)

நலமந்தம் இல்லதோர் நாடான பரமபதத்திலே தினமும் ஸ்ரீமந்நாராயணனுக்கு பகவத் தொண்டு செய்து, துதித்து வரும் நித்திய சூரிகளில் அனந்தாழ்வானும் ஒருவராவர்.

சென்றால் குடையாம்



இவருக்கு அரவரசன், ஆதிசேஷன் என்றும் பெயர்கள் உண்டு. திருமால் சென்று கொண்டு இருந்தால் தமது ஐந்து தலைகளைக் கொண்டு குடையாக விளங்குவாராம். திருமால் கிருஷ்ணாவதாரம் செய்து, வடமதுரையில் தேவகியாகிய ஒப்பற்றத் தாய்க்கு ஒப்பற்ற மகனாகப் பிறந்து, பிறந்த அப்பொழுதே வசுதேவராகிய தந்தையின் மூலம் கோகுலத்திற்குப் பயணம் செய்தார். நள்ளிருளில் பெருமழை பொழிந்து கொண்டு இருந்தது. அப்போது ஆதிசேடனாகிய அனந்தாழ்வான் தனது பணாமுடிகளால் குடையாக இருந்து உடன் சென்று கண்ணனெம்பெருமானை மழையினின்று காத்தருளினான். இதனைப் பொய்கை ஆழ்வார் "சென்றால் குடையாம்" என்று பாசுரமிட்டுப் பாடியருளினார்.

இருந்தால் சிங்காசனமாம்

ஸ்ரீமந் நாராயணன் பரமபதத்திலே வீற்றிருந்து தனிக்கோல் செலுத்தும்போது நித்திய சூரிகள் முதலாக அனைத்து திருமால் அடியார்களும் அவர் புகழ்பாடி துதிப்பர். ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி ஆகிய மூவரும் உடன்

வீற்றிருந்துள்ளனர். அங்கு அனந்தாழ்வான் ஸ்ரீமந் நாராயணனுக்கு, சிங்க ஆசனமாக இருந்து தனது தலையினால் குடையாக நின்றிருக்கின்றார். இதனை பொய்கை ஆழ்வார் "இருந்தால் சிங்காசனமாம்" என்று பாசுரமிட்டுப் பாடியருளினார்.

நின்றால் மரவடியாம்



எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் மண்ணுலகில் 108 திருப்பதிகளில் ஒன்றான திருவேங்கடத்தில் நின்ற திருக்கோலத்தில் எழுந்து அருளி சேவை சாதித்து வருகின்றார். இப்படி நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளிய போது தனது உடல் பாகத்தையும் வால் பாகத்தையும்

திருமாலுக்குப் பாதுகைகளாக்கியும் தனது முடியைக் குடையாகவுமாக்கி தொண்டாற்றி வருகின்றார். இதனால்தான் திருமலைக்கு சேஷகிரி என்று பெயர் சூட்டியுள்ளனர். இத்திருக்கோலத்தை ஆழ்வார் "நின்றால் மரவடிவாம்" என்று பாசுரமிட்டுப் பாடியுள்ளார்.

நீள்கடலுள் என்றும் புணையாம்

ஸ்ரீமந் நாராயணன் குறைகேட்பதற்கென்று திருப்பாற்கடலாகிய எல்லையற்ற பனிக்கடலில் படுத்த கோலத்தில் எழுந்தருளினான் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் காட்சி கொடுத்து குறை கேட்டு குறை தீர்த்து அருள் சுரந்து வரும் இந்நிலையை பொய்கை ஆழ்வார் **"நீள்கடலுள் என்றும் புணையாம்"** என்றும் பாடியுள்ளார்.

மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும் அணையாம்

இம்மண்ணுலக மக்களுக்குக் காட்சி கொடுத்து, அவர்களால் வணங்கி வழிபடச் செய்து வினைதீர்த்து வைகுந்தம் அடைய வேண்டி, திருவரங்கத்தில் எழுந்தருளினான். இங்கும் அனந்தாழ்வான் தன்னைப் படுக்கையாக்கியும் தனது முடிகளில் உள்ள மணிக்கற்களால் பலவித வண்ண ஒளிக் கதிர்களை வீசி மக்கள் எளிதில் கண்டு வணங்கும்படியும் தொண்டாற்றி வருகின்றார். யாவராவது ஒருவராவது வந்துதன்னை வணங்க

மாட்டார்களா என்று படுகாடு கிடக்கின்றான் திருவரங்கத்தில் திருவரங்கனாக. இதனை குலசேகராழ்வார் பாசுரமிட்டு பாடியருளியுள்ளார். இப்பாம்பணை பள்ளி கோலத்தை இருளிரியச் சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி இனத்துத்தி அணிபணம் ஆயிரங்கள் ஆரத்தி அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்றும், அளி விளங்கும் உயர்வெள்ளை அணையை மேவி திருவரங்கப்பெருநகருள் தெண்ணீர் பொன்னி திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும் கருமணியை கோமளத்தைக் கண்டு கொண்டு என்கண் இணைகள் என்றுகொலோ களிக்கும் நாளே" (பெருமாள் திருமொழி 1-1)

புணையாம்மணிவிளக்காம்

"சென்றால்குடையாம் இருந்தால்சிங்காசனமாம்
நின்றால்மரவடியாம் நீள்கடலுள் - என்றும்
புணையாம்மணிவிளக்காம் பூம்பட்டாம்புல்கும்
அணையாம் திருமாற்கு அரவு"



இந்நிலையை அரவணைப் பள்ளியானை என்று பெரியாழ்வாரும் "உரந்தரும் மெல்லணைப் பள்ளி கொண்டான்" என்று திருமங்கையாழ்வாரும் "பாம்பணைப் பள்ளியாய்" என்று நம்மாழ்வாரும்: அரவணைத் துயிலும் மால்" என்று தொண்டரடிப் பொடியாழ்வாரும் பாடி மகிழ்ந்தனர்.

அனந்தன் வடிவம்

அனந்தாழ்வான் ஆயிரம் தலைகளையும், ஆயிரம் தோள்களையும் கொண்டு: ஸ்ரீமந் நாராயணனுக்கு மெல்லணையாகிய படுக்கையாக விளங்குபவன். இதனை ஆழ்வார்கள் அருளிய அருளிச் செயலாகிய பாசுரங்களால் அறியலாம்.

"ஆயிரம் தோள் பரப்பி முடி ஆயிரம்
மின்னிலங்க"
"ஆயிரம் பைந்தலைய அனந்தசயனன்"
(பெரியாழ்வார் திருமொழி - 4.3.10)

"வாய் ஓர் ஈர் ஐநூறு துதங்களார்த்த
வளையுடம்பின் அழல் நாகம் உமிழ்ந்த
செந்தீ"
(பெரியாழ்வார் திருமொழி - 1-2)

"பணங்கள் ஆயிரமுடைய நல் அரவணை"
(பெரியாழ்வார் திருமொழி - 1.2.6)

ஐந்து தலை, வாய்

அனந்தாழ்வான் ஐந்து தலைகளையும், ஐந்து வாய்களையும் உடையவனாக விளங்குகின்றான் என்கின்றனர் ஆழ்வார்கள்.

"ஐந்தலை வாய் நாகத்தணை"
(நான்முகன் திருவந்தாதி - 35)

பல தலைகளை உடையவன்

அனந்தாழ்வான் பலதலைகளை உடையவன் என்று அருளியுள்ளனர் ஆழ்வார்கள்

"கவர் தலை அரவின் அமளி"
(திருவாசிரியம் - 1)

படம் பெற்ற பாம்பரசன்

தனது தலையில் ∪ போன்ற படத்தைப் பெற்றிருப்பவன் அனந்தன் என்கின்றனர் ஆழ்வார்கள். படம் எடுத்து ஆடும் போது இப்படத்தை நன்கு காணலாம்.

"அரவணையின் வாய் சிறப்புடையப்
பணங்கள்"
(பெரியாழ் திருமொழி - 4.9.7)

"பண நாகத்து அணை கிடந்த அவுணர்
கோனை"
(பெரியாழ் திருமொழி - 2.5.10)

செங்கண் சேஷன்

செங்கண் மாலாகிய திருமாலுக்குப் படுக்கையாக விளங்கும் அனந்தாழ்வானும் சிவந்த கண்களை உடையவன் என்கின்றனர் ஆழ்வார்கள்.

"செங்கண் அரவும்" (மூன்றாம் திருவந்தாதி - 26)
"செங்கண் நாகணை" (திருச்சந்த விருத்தம் - 15)

அனந்தன் இயல்பு - தீ உமிழ்தல்

அனந்தாழ்வான் தன் கண்களிலிருந்து சிவந்த அனலை உமிழ்ந்து, மென்மையான குளிர்ந்த படுக்கைக்கு ஈடுகொடுக்கின்றான் என்கின்றனர் ஆழ்வார்கள்.

"அழல் நாகம் உமிழ்ந்த செந்தீ
வீயாத மலர் சென்னி விதானமே போல்"
(பெருமாள் திருமொழி 1.2)

"ஈராயிரம் கண் வெந்தழல் விடுத்து"
(திருச்சந்த விருத்தம்)

"தீ வாய் அரவணை"
(இரண்டாம் திருவந்தாதி -18)

விடப் பையன் அனந்தன்

அனந்தாழ்வான் விடம் உள்ள பையினைத் தன் தலையில் உடையவன் என்கின்றனர் ஆழ்வார்கள்.

"விடப்பாம்பு அணையான்"
(திருவாய்மொழி - 7.6)

"விடம் கலந்து அமர்ந்த அரவணை"
(பெரிய திருமொழி - 9.8.6)

கருடப்பகையோன் அனந்தன்

அனந்தாழ்வானுக்கும் கருடாழ்வானுக்கும் எப்பொழுதும் பகைமை உண்டு என்று குறிப்பிட்டனர் ஆழ்வார்கள்.

"பையிடை நாகப் பகை கொடியானுக்கு
பல்லாண்டு கூறுதுமே" (திருப்பல்லாண்டு-8)

"புள்ளின் மெய்ப்பகை"
(திருச்சந்த விருத்தம்-19)

பாற்கடலில் பள்ளி

ஸ்ரீமந் நாராயணன் தேவர் - முனிவர் குறை கேட்பதற்காகவே பரமபதத்தை விட்டு, திருப்பாற்கடல் வந்து அனந்தாழ்வானைப் படுக்கையாகக் கொண்டு வியூக நிலையில் எழுந்தருளியுள்ளான் என்பதை ஆழ்வார்கள் அருளிச் செயல் இயம்புகின்றது.

"கிடந்தானை தடங்கலுள் பணங்கள் மேவி"
(பெரிய திருமொழி - 2.5.6)

"மூரிநீர் அராவணைத் துயின்ற"
(திருச்சந்த விருத்தம் - 8)

"பனிக்கடலில் பள்ளி கோளை பழகவிட்டு
ஓடிவந்து"
(பெரியாழ் திருமொழி - 5.4.9)

யுகங்கள் தோறும் அனந்தன்

அனந்தாழ்வான் இராமாவதாரத்தில் இலக்குவனாகவும், கிருஷ்ணாவதாரத்தில் பலராமனாகவும், கலியுகத்தில் பகவத் இராமாநுசராகவும், மணவாள மாமுனிகளாகவும் அவதாரம் செய்து, திருமாலுக்குப் பலவகையிலும் பகவத் தொண்டாற்றி பக்தியில் சிறந்து விளங்கினான். எனவே, அனந்தன் - அனந்தாழ்வான் என்று போற்றப்படுகின்றார்.

திருமாலின் பெருமையை ஆயிரம் நாவுடைய ஆதிசேஷனாலும் சொல்ல இயலாது என்பர். அனந்தாழ்வானைப் போல் நாமும் இடைவிடாது பகவத்தொண்டு செய்து, பரமபத நாதன் பேரருளைப் பெற்று உய்வோமாக!

"அரவாசப் பெருஞ்சோதி அனந்தன் என்றும்
வாழியே!

முனைவர். எ. பரந்தாம ராமாநுஜ தாசர்
தாம்பரம், சென்னை - 600 073.



வேலும் மயிலும் துணை

கந்தர் அநுபூதி

அரதத்த சிவாச்சாரியார் ஒருநாள் ஒரு கழுதையைப் பார்த்து வீதியில் இறங்கி நமஸ்காரம் செய்தார். அப்போது எல்லோரும் அவரிடம் கேட்டார்கள். "நீங்கள் ஏன் அந்த கழுதையைப் பார்த்து நமஸ்காரம் செய்தீர்கள்?" என்று. அவர் அதற்கு பதில் சொன்னார். "காலையில் போகும்போது அந்தக் கழுதை அழுக்கு மூட்டையை சுமந்து கொண்டு சென்றது. அப்போது அதன் முகத்தில் எந்தவிதமான துன்பமோ, இன்பமோ இல்லை. அதே போல் துணிகளை வெளுத்துக் கொண்டு திரும்பி கொண்டு வரும்போதும் அதனுடைய முகத்தில் துன்பமோ இன்பமோ இல்லை.

அது எப்போதும் ஒரே நிலையில் தன் முகத்தை வைத்துக் கொண்டிருந்தது. துக்கமோ, இன்பமோ இல்லை. அதாவது இன்பத்திற்கு இன்பப்படாமல், துன்பத்திற்கு துன்பப்படாமல் இருக்கும் சமநிலையை காண்பித்தது. ஆகவே இதைக் குருவாக நினைத்து நமஸ்காரம் செய்தேன்." ஞானம் என்றால் என்ன? இன்பத்திற்கு இன்பப்படாமல், துன்பத்திற்கு துன்பப்படாமல் இருப்பதுதான் ஞானம். அரசாட்சியை எடுத்துக் கொள் என்றபோதும் இன்பமில்லை. விட்டுவிட்டுப் போ என்ற போதும் துன்பம் இல்லை என்ற சமநிலை, சாந்தம், இராமனுக்கு இருந்தது.

இராமனுக்கு நாட்டை விட்டுவிட்டுப் போகும்போது மிகுந்த மகிழ்ச்சி! ஏன்? பரதனுக்குத் தான் அரசு என்று கேட்ட உடன் மூன்று பங்கு பொலிவு பெற்று அவன் முகம் அன்றலர்ந்த தாமரை போல் இருந்ததாம். நமக்கு அந்தப் பக்குவம் தேவை.

கந்தனூர்ச் சிவன் கோவிலுள் செல்கிறார் ஒரு சிவாச்சாரியார். அப்போது கோவில் மணியக்காரர் ஒரு தாசியைக் கட்டி வைத்து அடித்துக் கொண்டிருந்தார். ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்டார் சிவாச்சாரியார். அதற்கு மணியக்காரர் சொன்ன பதில், 'இந்த தாசி நான்கு நாட்களாகக் கோவிலுக்கு பணிவிடை செய்ய வரவில்லை. அதனால்தான் அடிக்கிறேன் என்று கூறினார். அதைக் கேட்ட சிவாச்சாரியார் கதறிக் கதறி அழுதாராம்.

மாணவர்கள் எல்லோரும் "தாசியை அடித்தால் நீங்கள் ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டார்கள், அதற்கு அவர் " நான் எத்தனையோ நாள் சிவபெருமானை நினைக்காமல், அவர் நாமத்தை ஜெபிக்காமல் இருந்திருக்கிறேன். ஆனால் அப்போதெல்லாம் இது போன்ற தண்டனையை எனக்கு ஒருவரும் வழங்கவில்லை. என்னைப் புளியம் விளாரால் அடிக்கவில்லையே" என்று அழுதேன் என்றார். ஒரு சிஷ்யனைப் பார்த்து "இன்றிரவு என்னை புளியம் விளாரால் அடி" என்று சொன்னார். அதே போல் இரவில் அவர் தூங்கும்போது சிஷ்யன் புளியம் விளாரால் அடித்தான். உடனே அவர் 'சிவா' என்று கூறி எழுந்தார். உடன் அந்த சிஷ்யன் 'ஏன் உங்களை அடிக்கச் சொன்னீர்கள்?' என்று கேட்டான், அதற்கு அவர் கூறிய பதில், 'என்னை நான் மறந்து தூங்கும்போது திடீரென்று எழுந்தால் 'ஐயோ' என்று சொல்லாமல் 'சிவா' என்று சொல்கிறேனா என்று என்னைப் பரீட்சை செய்து பார்க்கத்தான் நான் உன்னை அப்படி அடிக்கச் சொன்னேன் என்று கூறினார். என் நிலை கலங்கிய காலத்தில் கூட ஆண்டவன் மீது நினைவு இருக்கிறதா என்று பார்த்தேன் என்றார் பெரியவர். அப்படி நினைத்ததும் மறந்ததும் இல்லாமல் எப்போதும் உன் கமல மலர்ப்பாதத்தைத் துதிக்க அருள்வாய் வரம் தருபவனே! முருகனே! மயிலேறின மாணிக்கமே! அடியவரைக் காக்க விரதம் பூண்டவனே! சூரனை வதைத்தவனே!

"கருதா மறவா நெறிகா ணஎனக்
கிருதாள் வனசம் தரஎன் றிசைவாய்
வரதா முருகா மயில்வாக னனே!
விரதா சுரசூர விபா டணனே!"

நமக்கு எந்தப் பொருளைப் பார்த்தாலும் ஆசை, காமம், நினைவு வரும். திருவண்ணாமலை மீது கருமேகம் படர்ந்திருக்கிறது. நானும் பார்த்து இருக்கிறேன். இது சிவபெருமான் யானைத்

தோலைப் போர்த்திக் கொண்டிருக்கிறது போல் பகவான் ரமணருக்குத் தோன்றியதாம். எனக்குத் தெரியவில்லை. அந்த நிறத்தில் புடவை கட்டிக் கொண்டால் நன்றாக இருக்கும் எனும் ஆசைதான் வருகிறது.

மெய்ப்பொருளாகிய ஆண்டவனின் உபதேசம் கேட்ட பிறகு வேறு எந்த எண்ணமும் ஏற்படாது. எல்லாவற்றிற்கும் ஒளி கொடுக்கக் கூடிய பேரொளியைப் பார்த்துவிட்டால் நமக்கு வேறு ஒன்றும் கண்ணிற்படாது, தெரியாது. முருகன் என்று எண்ணி விட்டால் அவனுடைய வாசனைதான் தெரியும். அதனால்தான் திருமுருகாற்றுப்படையில் முருகன் மணங்கமழும் தெய்வமாக வருகிறார் என்று கூறினார் நக்கீரர். "ஜல் ஜல்" சத்தம் கேட்டுப் பிஞ்சு குழந்தையாக முருகன் வருகிறார் என்று கூறியுள்ளார். தாய் மாதிரி அன்பு வந்துவிட்டால் எப்படி வேண்டுமானாலும் குழந்தையை எடுக்கலாம்.

தாயன்புதான் முக்கியம். பக்திதான் முக்கியம் அந்தக் குழந்தையை முருகனை, பக்தியின் மூலம் அணைக்கலாம். கண்ணன் கையில் புல்லாங்குழல் உண்டு. முருகன் கையிலும் புல்லாங்குழல் உண்டு. திருச்செங்கோட்டு மலையில் அருணகிரிநாதர் முருகன் கையில் கிளியாக உட்கார்ந்து பாடல் பாடினார். பஜனை என்றால் திருப்புகழ்தான். கண்ணனும் எளிய தெய்வம் கந்தனும் எளிய தெய்வம். கல்யாணம் முடிந்தவுடன் முருகப்பெருமான் வேட்டுவர் மலையின் மீது உட்கார்ந்தான். வள்ளியம் பெருமாட்டிதான் தெரிந்ததேயொழிய வேறு எதுவும் முருகனுக்குத் தெரியவில்லை. அதனால்தான் முருகன் இறங்கி வந்தான். எங்கே மலை இருக்கிறதோ அங்கெல்லாம் முருகப்பெருமான் இருக்கிறான், விளையாடுகிறான் "விரிதாரணன்" முருகன்.

உலகத்தில் விரிந்திருக்கிற பொருள்கள் எல்லாவற்றையும் தாங்குகிறவன் என்று பொருள். மனிதர்களுக்குள் உள்ள பெரிய கொடுமை புறஞ்சொல்லுதல் தான் ஆகும். அதாவது ஒருவன் இல்லாத போது அவனைப் பற்றி பேசுதல். நாம் நம்முடைய உடம்பைச் சுமந்து கொண்டிருக்கிறோம். நம் உயிர் போய் விட்டால் நம் உடலைத் தூக்க 4 அல்லது 6 பேர் வேண்டியுள்ளது. "என்னடா பிணக்கணம் கனக்கிறது" என்று சொல்லுகிறார்கள். நாம் நம்முடைய உடம்பை சுமக்கிறோம். ஆனால் நம் எல்லோரையும் ஆண்டவனுடைய திருவடி தாங்குகிறது. ஆண்டவன் கீழேயிருந்து நம்மையெல்லாம் தாங்குகிறான். இந்த உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களையும் தாங்குகிறது ஆண்டவனுடைய திருவடி, வேள்வி, அதாவது விரும்பிச் செய்யப்படுவது வேள்வி. கணவனும் மனைவியும் சேர்ந்து வாழும்போது குடும்பத்தில் செய்யும் வேள்வி எது என்றால் அதுதான் விருந்தோம்பல். மாதா பிதாவைக் காட்டுகிறாள். பிதா ஆச்சாரியனை காட்டுகிறான்.

ஆச்சாரியன் தெய்வத்தைக் காட்டுகிறான். குரு என்கிற வார்த்தைக்கு இருட்டைப் போக்குகிறவன் என்று பொருள். நாங்கள் எல்லாம் (வாத்தியார்) இருட்டை சம்பாதிக்கிறவர்கள், ஏனென்றால் நாங்கள் எல்லாம் பணத்திற்காகத்தான் (பொருளுக்கு) சொல்லிக் கொடுக்கிறோம். ஆனால் குரு என்பவன் இருட்டைப் போக்குகிறவன். ஆச்சாரியன்: குடும்பத்திலிருந்து சம்பாதிக்கிற காலத்தில் ஐந்து பங்கு வைத்து செலவழிக்க வேண்டும் என்று ஒருவன் கூறினான். அதாவது முன்னோருக்கு ஒரு பங்கு, தெய்வத்திற்கு ஒரு பங்கு, விருந்தினர்க்கு ஒரு பங்கு, சுற்றத்தாருக்கு ஒரு பங்கு, தனக்கு ஒரு பங்கு. அடுத்தாற்போல் ஒருத்தன் வந்தான். ஐந்து பங்கு வைக்கக்கூடாது, 6 பங்கு வைக்க வேண்டும் என்றான். அதாவது ஆறில் ஒரு பங்கு அரசனுக்கு என்று ஒதுக்க வேண்டும் என்று கூறினார். ஆசிரியன் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அரசுக்கு செலுத்த வேண்டிய பணம் செலுத்தப்பட்டாக வேண்டும்.

எது சிறந்த தர்மம் என்று ஒருவன் கேட்டால் அதற்கு சொன்னான். கிரகஸ்தனுக்கு சிறந்த தர்மம் விருந்தாளிக்கு விருந்து போடுவது தான் என்று கூறினான். கோபத்தையும், வருத்தத்தையும் விருந்தாளிக்கு முன் காட்டக் கூடாது. எல்லா யக்ஞயத்தையும் விட சிறந்த வேள்வி விருந்தோம்பல். முருகனுக்கு விக்கிரமன் என்று பெயர். மன்மதனால் ஏற்படக் கூடிய சேட்டைகள் போக்கக் கூடிய தெய்வம் முருகன். விக்கிரமன் வெற்றியுடையவன். ஒப்பற்ற பரம்பொருள் முருகன். தேவர்களுடைய புரி அமராபுரி.

அந்த அமராபுரியைக் காப்பாற்றிக் கொடுத்த முருகப்பெருமான் என்னையும் காப்பாற்றிக் கொடுத்தான். எனக்கு மெய்ப்பொருளை உபதேசம் செய்தான். அதனால் அவன் தாளைப் பணிய நான் பேறு பெற்றேன். "அவன் அருளாலே அவன்தாள் வணங்கினேன்" என்றார்.

எழுந்ததிலிருந்து படுக்கப் போகும் வரை ஒரே நினைவாகவா இருக்கிறது? நிச்சயமா கிடையாது. ஐந்து நிமிடம் கூட நாம் ஒரே நினைவாக இருக்க முடியாது. அவ்வாறு இருந்து விட்டால் மெய்ப்பொருளை காணலாம். ஒருத்தி தன் தோழியிடம் சொன்னாள். என்னவர் என் நெஞ்சில் எப்போதும் இருக்கிறார். ஆகவே நான் பால்

சாப்பிடும் போதுகூட நன்றாக ஆற்றிக் குளிர வைத்துத்தான் சாப்பிடுகிறேன். ஏனென்றால் சூடாக சாப்பிட்டு விட்டால் அவருக்குச் சுட்டுவிடுமே அதற்காகத்தான் என்று கூறினாள்.

"வெய்துண்டல் அஞ்சுதும் வேபாக்கு அறிந்து"
அவனையே இவள் நெஞ்சு நினைத்துச்
சுமந்திருக்கிறது.

"தெய்வம் தொழாஅள் கொழுநற்
றெழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

என்ற குறளில், 'தொழுது எழுவாள்' என்று போட்டிருக்கிறதே ஏன் என்று ஒருவன் கேட்டான். எழுந்த பின்தானே தொழ முடியும், தொழுத பின் எவ்வாறு எழ முடியும்? அதாவது, மனதிலே எப்பொழுதும் அவன் இருப்பதால், அவள் எப்பொழுதும் தொழுகிறாள். தொழுதபின் எழுகிறாள். ஆகவே அதுதான் சரி என்று பதிலுரைத்தார். முருகப்பெருமானை இப்போதுதான் நினைத்தேன். இப்போது தான் மறந்தேன் என்று சொல்லக்கூடாது.

இப்போதுதான் நினைத்தேன் என்றால் அதுவரை மறந்தான் என்றுதான் பொருள். ஆகவே நினைத்தலும் மறத்தலும் இல்லாத நிலை எப்போதும் நினைத்திருக்கிறோம், மறந்ததேயில்லை என்றுதான் பொருள். பக்தன் பகவானை மறக்காமல் இருக்க வேண்டும். அதுதான், கருதா, மறவா நிலையில், இருதாள் வனசம் தர வந்தாயே! அதாவது எனக்கு உன்னுடைய தாமரையாகிய திருவடியைத் தந்தாயே! என்றார். ஆண்டவனுடைய திருவடியை ஏன் தாமரை என்று சொல்லுகிறோம்? தாமரைக்கு வாசனை உண்டு. அது எல்லா மூக்குக்கும் தெரியாது. அது நுணுக்கமாகத் தெரிந்தவர்களுக்கு மட்டும் தான் தெரியும். ஆண்டவனுடைய திருவடிகளின் பெருமை ஞானிகளுக்கு மட்டும்தான் தெரியும்.

கண்ணுக்குப் பார்க்க இனிமை, வாசனை மூக்குக்கு இனிமை, நாக்குக்குச் சுவை, ஐம்புல இன்பத்தை ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் தருவது ஆண்டவனுடைய திருவடி மட்டும்தான். கணவனுக்கும், மனைவிக்கும் இந்த ஐம்புல இன்பத்தைக் கொடுப்பது தன்னுடைய குழந்தைதான். ஐம்புல இன்பத்தைத் தருவது எல்லோருக்கும் ஆண்டவனுடைய திருவடிதான். அந்த தாமரைதான், அடியவர் எனும் வண்டுக் கூட்டம் நாடும் தாமரை. அதை நான் பணியத் தவம் செய்தேன்.

"காளைக் குமரேசன் எனக் கருதித் தாளைப் பணியத் தவம் எய்தியவா! பணியாத, ஆணவம் பிடித்த அசுரனாகிய சூரனைப் பிளந்தவன் என்று குறிப்பிடுகிறான். தவத்தில் மிகுந்தவர்கள் அசுரர்கள். தவத்தில் மிகுந்தவனாகிய ஆணவச் சூரனைப் பிளந்தவன் என்று கூறுகிறான். "காளைக் குமரேசன் என்று கருதித் தாளைப் பணியத் தவம் எய்தியவா, பாளைக் குழல் வள்ளி பதம் பணியும் வேளைச்சுர பூபதி" என்றார் கூந்தலில் வைத்துப் பின்னக் கூடிய அணிகலனுக்கு பாளை என்று பெயர். அது பழங்காலத்து அணி. தேவர்களுக்கு எல்லாம் தலைவன் முருகன்: ஆனால் நீ வள்ளி காலில் விழுகிறாய் என்று தெரிந்துதான் வந்துள்ளேன். உன்னை என்ன கருதி வந்துள்ளேன்? நான் உன்னை அடைய வந்துள்ளேன். வள்ளியம் பிராட்டியார் காலில் விழுந்து விளையாடுகிறாய், எளிமையானவன் நீ.

ஆகவே எனக்கும் முருகப்பெருமான் அருளுவார் என்று அருணகிரிநாதர் கருதினார். ஜீவாத்மா பெண். பெண்களுக்கு சந்நியாசம் கிடையாது. இன்று எல்லோருக்கும் சந்நியாசம் கொடுத்து விடுகிறார்கள். பெண் பெண்ணாகவே இருப்பதே துறவறம். பெண்தானே பிறந்த வீட்டிலிருந்து புகுந்த வீட்டிற்கு செல்லுகிறாள். புகுந்த வீட்டைத்தான் தன் வீடு என்று சொல்லுகிறாள். ஆனால் ஆண் அப்படி இல்லை. பெண் தன் பழக்கவழக்கத்தையே மாற்றிக் கொள்கிறாள். அசோகவனத்தில் சீதை இருக்கும்போது இராமனையே நினைத்துக் கொண்டிருந்தாளே அதுதான் தவம். இராமன் சீதையை நினைத்துக் கொண்டிருந்தது தாபம்.

கடமை பற்றி இப்போது கூறுகிறேன். சங்க காலத்தில் ஒரு பெண் கூறியது.

ஈன்று எடுத்து வளர்ப்பது என் தலைக்கடமை கல்வி கேள்விகளில் வல்லவனாக ஆக்குவது தகப்பனுக்கு கடமை. வேலைக் கூர்மையாக ஆக்குவது கொல்லனுக்குக் கடமை. நல்லொழுக்கத்தைக் கற்பிப்பது அரசனுக்கு கடமை. என்று கூறினாள். பத்துமாதம் சுமக்கிற போது துன்பம். ஈன்று எடுக்கும்போது அதைவிடத் துன்பம். அவள்தான் மிகச் சிறந்த தியாகி. ஒவ்வொரு பெண்ணும் தெய்வத்தை மறக்கமாட்டாள். தாயின் அன்புக்கு ஈடுசொல்ல வேண்டுமானால் அது ஆண்டவன் கருணைதான். தாயினும் சாலப் பரிந்து என்றுதான் சொல்லப்படுகிறது. ஜீவாத்மா எல்லோரும் பெண். ஆண்டவன் ஒருவன்தான் ஆண். அருணகிரிநாதர் முருகன் வள்ளியம் பெருமாட்டிக்குச் செய்த அருளை நினைத்துத் தனக்கும் அருள் செய்ய வேண்டும் என்று தாளைப் பணிகிறார்.

"காளைக்கும ரேசன் எனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா!
பாளைக் குழல்வள் ளிபதம் பணியும்
வேளைச் சுரபூ பதிமே ருவையே!

... தொடரும்

டாக்டர் சரசுவதி இராமநாதன்

அவதாரங்களின் சந்திப்பு



தயரதன் மதலையாய்த் தோன்றிய இராமபிரான், விசுவாமித்திரருடன் கானகம் புகுந்து, தாடகையை வதம் செய்து, அகலிகைக்கு அருள் செய்து மிதிலையை அடைகிறார். அங்கு அண்ணலும் நோக்க அவளும் நோக்க வில்லிறுத்து சீதாபிராட்டியை மணம் முடிக்கிறார்.

பிறகு தந்தையுடன், தாயாருடன், தம்பியருடன் தன் துணைவி ஜானகியுடன் அயோத்தி பயணமாகிறார். அப்போது மிகுந்த கோபத்துடன் பரசுராமர் எதிரே வருகிறார்.

மேருமலை வருவதுபோல நடையுடனும், கனல் கக்கும் கண்களுடனும் வரும் பரசுராமர், இராமபிரானிடம், "முன்னரே பழுதுபட்ட ஊனவில் முறித்தாய்! இதோ இந்த வலிமையான திருமாலின் வில்லை வாங்கி வளைத்திடு" என்று கூறினார்.

இராமபிரான் "வென்றிவில் தருக" எனக் கேட்டு அவ்வில்லை வாங்கினார். நாணேற்றித் தோள் வரை இழுத்து பரசுராமரைப் பார்த்து "நீ தவ ஒழுக்கம் மேற்கொண்டுள்ளாய் ஆதலின் உன்னைக் கொல்லல் ஆகாது: ஆனால் இந்த அம்பிற்கு இலக்கம் யாது: இயம்புதி விரைவில்: என்று கேட்டார்.

உடன் பரசுராமன் வந்திருப்பது திருமால் என உணர்ந்து தன் செருக்கழிந்தார். "சக்கராயுதம் தரித்த திருமால் நீயே என்பது உண்மை! உன்னால் எய்யப்படும் அம்பு மூலம் எனது தவங்களின் முழுப்பயனையும் கவர்ந்து கொள்க" என்று கூறி அங்கிருந்து பரசுராமர் சென்றார்.

இருவேறு அவதாரங்கள் சந்தித்த அற்புதமான காட்சி அது.

ஆழ்வார் பெருமக்கள் இந்த அபூர்வமான சந்திப்பைத் தங்களது அருளிச் செயல்களில் எடுத்தோதி உள்ளனர்.

நந்தகோபன் மதலையான கண்ணனெம்பெருமானைப் பாட வந்த பெரியாழ்வார் இந்நிகழ்ச்சியைக் கூறி இராமனின் வில்லின் வலிமையைப் போற்றுகிறார். "எனது வில்லான திருமாலின் வில் வலிமை கண்டு போ என்று சொல்லி எதிரே வந்த பரசுராமரின் வில்லை வாங்கி அதன் மீது அம்பேற்றி பரசுராமரின் தவ வலிமையைக் கவர்ந்த இராமபிரானின் வில் வன்மையைப் பாடிப்பற" என்ற பெரியாழ்வாரின் அருளிச்செயல் வணங்கத்தக்கதாகும்

"என்வில் வலிகண்டு போவென்
றெதிர்வந்தான்
தன்வில்லி னோடும் தவத்தை யெதிர் வாங்கி
முன்வில் வலித்து முதுபெண் ணுயிருண்டான்
தன்வில்லின் வன்மையைப் பாடிப்பற!
தாசரதி தன்மையைப் பாடிப்பற" (3-9-2)

சீதாபிராட்டியைத் தேடிச்செல்லும் அனுமனிடம் இராமபிரான் பல அடையாளங்களைக் கூறுகிறார். அந்த அடையாளங்களில் ஒன்றை அசோகவனத்தில் பிராட்டியிடம் ஆஞ்சநேயர் இவ்வாறு உரைக்கிறார்.

"கருங்குழல் உடைய பிராட்டியே! அடியேன் விண்ணப்பம் செய்து உரைக்கின்றேன். அந்த நாளில் மிதிலை வந்து மணிமுடி தரித்த சனகன் கொடுத்த வில்லை முறித்ததோடு உங்களை மனம்புரிந்து வரும்போது, அருந்தவம் செய்த பரசுராமர் எதிரே வந்து தடுத்து நிற்க, அவர்தந்த வில்லை வாங்கி வளைத்து அந்த பரசுராமரின் தவத்தைச் சிதைத்ததும் ஓர் அடையாளமாகும்".

"நெறிந்தகருங் குழல் மடவாய்!
நின்னடியேன் விண்ணப்பம்
செறிந்தமணி முடிச்சனகன்
சிலையிறுத்து நினைக்கொணர்ந்தது

அறிந்து அரசு களைகட்ட
அருந்தவத்தோன் இடைவிலங்க
செறிந்தசிலை கொடுதவத்தைச்
சிதைத்ததும் ஓர் அடையாளம் (3-10-1)

என்பது பெரியாழ்வாரின் அருளிச் செயலாகும்.

இராமபிரான் தாயுரை கொண்டு கானகம் சென்ற போது தசரதன் புலம்பியதாகப் பத்துப்பாசுரங்களை "வன்தாளிணை" என்று தொடங்கிக் குலசேகராழ்வார் அருளிச் செய்துள்ளார். "முன்பொருநாள் மழுப்படை தாங்கிய பரசுராமரின் வில்லை வாங்கி வளைத்து அவரின் தவத்தை அழித்தவனே! உன்னையே எழுபிறப்பிலும் மகனாகப் பெறவே நான் விரும்புகிறேன்! என் இனிய இராமபிரானே" என்று தயரதன் புலம்புவதாக அருளிச் செய்துள்ள பாசுரம் இதுதான்.

"முன்னொருநாள் மழுவாளி சிலைவாங்கி
அவன்தவத்தை முற்றும் செற்றாய்
உன்னையும் உன் அருமையையும்
உன்மோயின்
வருத்தமும் ஒன்றாகக் கொள்ளாது
என்னையும் என் மெய்யுரையும் மெய்யாகக்
கொண்டு வனம் புக்க எந்தாய்
நின்னையே மகனாகப் பெறப் பெறுவேன்
ஏழ்பிறப்பும் நெடுந்தோள் வேந்தே" (9-4)

குலசேகராழ்வார் இராமனிடத்தில் மிகவும் ஆழங்கால்பட்டவர். இராமாயண உபன்யாசம் கேட்கும்போது இராமபிரான் போர்க்களத்தில் தனியாக நிற்கிறார் என்று கேட்டவுடன் தன்னை மறந்து இராமனுக்காகத் தன் படைதிரட்டிக் கொண்டு சென்றவர் அவர் தில்லைநகர் திருச்சித்திரகூடத்தில் தொல்லிராமனாய்த் தோன்றிய கதைமுறையைப் போற்றிப் புகழ வருகிறார்.

"சிவந்த வரிகளை உடைய நீண்ட கண்கள் கொண்ட சீதைக்காக சிவன்வில்லை முறித்தார். மழுப்படை ஏந்தி வந்த பரசுராமரின் வில்லை வாங்கி வெற்றி பெற்று பகைவர் அஞ்சப்போர் புரிந்த இராமபிரானை திருச்சித்ரகூடத்தில் கண்டு இறைஞ்சினேன்" என்று அருளிச் செய்யும் போது பரசுராமரும் இராமரும் எதிர்கொண்ட காட்சியை நம் கண்முன் கொண்டு வந்து போற்றுகிறார்.

"செவ்வரிநற் கருநெடுங்கண் சீதைக் காகிச்
சினவிடையோன் சிலையிறுத்து மழுவா
ளேந்தி
வெவ்வரிநற் சிலை வாங்கி: வென்றி
கொண்டு
வேல்வேந்தர் பகைதடிந்த வீரன் தன்னை
தெவ்வர்அஞ்ச நெடும்புரிசை டியர்ந்த
பாங்கர்த்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
எவ்வரிவெஞ் சிலைத்தடக்கை இராமன்
தன்னை
இறைஞ்சுவார் இணையடியே இறைஞ்சி
னேனே!" (10-3)

என்பது அவர் அருளிச் செயலாகும்.

திருமழிசையாழ்வார் அருளிச் செய்த

நான்முகன் திருவந்தாதியில் எட்டாம் பாசுரத்தில் "ஈசனை வென்ற சிலை கொண்ட செங்கண்மால்" என்று அருளிச் செய்வார்.

இவ்வாறு ஆழ்வார் பெருமக்கள் இருவேறு அவதாரங்களின் சந்திப்பில் இன்பங் கொண்டு அருளிச் செய்துள்ளனர்.

- பாச்சுடர் வளவ. துரையன், எம்.ஏ., பி.எட்.,

திருக்கோயில்

திங்கள் இதழ்



தனி இதழின் விலை ரூ. 10/-
ஓராண்டு சந்தா ரூ. 120/-
ஐந்தாண்டு சந்தா ரூ. 500/-
பத்து ஆண்டுச் சந்தா ரூ. 1000/-
ஆயுட்காலச் சந்தா ரூ. 1500/-
(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்
விளம்பரக் கட்டணம் விபரம்

1.பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) ரூ. 15,000/-
2.முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) ரூ. 10,000/-
3.பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) ரூ. 7,500/-
4.உட்புறம் முழுப்பக்கம் ரூ. 5,000/-
5.உட்புறம் அரைப்பக்கம் ரூ. 3,000/-

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,
119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.
என்ற முகவரிக்கு அனுப்பவும்

சைவமும்

கலைமாமணி செந்தமிழ்வாரிதி
முனைவர் இரா. செல்வக்கணபதி

காப்பியங்களில் சிவன்

தமிழின் முதல் காப்பியம் சிலப்பதிகாரம். சமணசமயத் துறவி இளங்கோவடிகளால் இந்நூல் இயற்றப்பட்டது என்றாலும், வேத வழிப்பட்ட வைதிக சமயங்களைப் பற்றிய அரிய குறிப்புகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. தமிழ்நாட்டு மக்கள் தங்களுக்குள் சமய பேதங்கள் ஏதுமின்றி, அவரவர் போக்கில் வழிபாடுகளை நிகழ்த்தி வந்துள்ளமையை இந்நூலால் உணர முடிகிறது. சிவன், கொற்றவை, முருகன் தொடர்பான பல குறிப்புகளும், அரிய இலக்கியத் தரம் மிகுந்த பாடல்களும் இதில் இடம் பெற்றுள்ளன. கோவலன், கண்ணகி அழகைப் புகழ்ந்து பேசும், மனையறம் படுத்த காதையில்,

"குழவித் திங்கள் இமையவர் ஏத்த
அழகொடு முடித்த அருமைத்து ஆயினும்
உரிதின் நின்னோடு உடன்பிறப்பு
உண்மையின்
பெரியோன் தருக திருநுதல் ஆக"

எனவரும் பகுதியில், சிவனை இளங்கோவடிகள் பெரியோன் எனச் சுட்டுகிறார். பூம்புகாரில்,

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்"

இருந்ததாகவும் அவர் பதிவு செய்கிறார். சிவனைப் பிறவா யாக்கைப் பெரியோன் என்று சுட்டுவது கருதத்தக்கது.

சிலம்பில் கொற்றவை

சிலப்பதிகாரத்தின், வேட்டுவ வரி என்ற பகுதியில் கொற்றவை வழிபாடு பற்றிய பல செய்திகள் இடம் பெற்றுள்ளன. அம்மை, கலையமர் செல்வி என்று குறிக்கப்படுகிறாள். அம்மைக்குச் செய்யப்படும் அலங்காரங்களும், கொற்றவைக்குப் படையல் இடப்படும் உணவு வகைகளும் இங்கே தொகுத்துச் சுட்டப்பட்டுள்ளன. சிவனுக்கு உரிய அடையாளங்கள் பலவும் கொண்டவளாகக் கொற்றவை திகழ்கிறாள். அதனை,

"மதியின் வெண்தோடு சூடும் சென்னி
நுதல் கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்
பவள வாய்ச்சி தவளவாள் நகைச்சி
நஞ்சுண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்து
அரவநாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்
துளை எயிற்று உரகக் கச்சுடை முலைச்சி
வளையுடைக் கையில் சூலம் ஏந்தி
கரியின் உரிவை மேகலை ஆட்டி
சிலம்பும் கழலும் புலம்பும் சீறடி
வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை"

என்ற விரிவாக இளங்கோவடிகள் எடுத்துரைக்கிறார்.

உமை - பல பெயர்கள்

சிவன், உமை, முருகன் முதலியோருக்குப் பலபெயர்கள் உண்டு. பிற்காலச் சமய நூல்கள் இப்பெயர்களை எடுத்துரைத்து, வழிபாட்டுக்கு உரிய போற்றிப் பாடல்களை வகுத்துத் தந்தன. பதினெட்டு, நூற்றி எட்டு, ஆயிரத்து எட்டு என்று இப்போற்றிகள் தொகுக்கப்பட்டன. இவ்வகையில், உமை பற்றிய போற்றிப் பாடல்கள் உருவாவதற்குச் சிலப்பதிகார வேட்டுவ வரியில் பல குறிப்புகள் துணை நின்றமையை அறிய முடிகிறது.

"அமரி குமரி கவுரி சமரி
சூலி நீலி மாலவற்கு இளங்கிளை
ஐயை செய்யவள் வெய்யவாள் தடக்கைப்
பாய்கலைப் பாவை பைந்தொடிப் பாவை
ஆய்கலைப் பாவை அருங்கலப் பாவை
தமர் தொழ வந்த குமரிக் கோலத்து
அமரிளம் குமரி..."

என்று அடுக்கப்படும் உமையம்மையின் பல்வேறு திருப்பெயர்கள் பிற்காலத்தே அர்ச்சனைக்கு உரிய மந்திரங்களில் இடம் பெற்றிருத்தலைக் காண முடிகிறது.

கொற்றவை இசைப் பாடல்கள்

முல்லையும் குறிஞ்சியும் வளங்குறைந்தபோது. பாலை நிலமாகத் தோற்றம் தரும். அத்தகு பாலை நிலத் தெய்வம் கொற்றவை. இந்நிலத்து வாழும் எயினர் என்ற மக்கள், கூட்டமாகக் கூடி நின்று, கொற்றவையை முன்னிலைப்படுத்தி பாடியும் ஆடியும் வழிபடுதல் உண்டு என்பது வேட்டுவவரி என்ற பகுதியில் தெரிய வருகிறது. உரைப்பாட்டு நடை, வள்ளிக்கூத்து, முன்னிலைப் பரவல், வென்றிக்கூத்து, கூத்துட்படுதல், அவிப்பலி என்ற உட்தலைப்புகளில், கொற்றவை புகழ்பாடும் இசை மற்றும் கூத்துக்கு உரிய 21 இசைப்பாடல்கள் இங்கே காணப்படுகின்றன. உமை தொடர்பான முதல் இலக்கியப் பதிவாக இப்பகுதி அமைந்துள்ளது. முன்னிலைப் பரவல் என்ற பகுதியில்,

"ஆனைத்தோல் போர்த்துப் புலியின்
உரியுடுத்துக்
கானத்து எருமைக் கருந்தலைமேல்
நின்றாயால்
வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுகின்றியே நிற்பாய்"

என்ற அழகிய, கொற்றவையைப் புகழ்ந்து பாடும் பாடல் அமைந்துள்ளது.

....தொடரும்

தமிழும்

மனக்குறை போக்கும் மயிலம் முருகன்

சூரபதுமன் மயில் வடிவ மலையாய் நின்று தவம் செய்த இடம் - சித்தர்களுக்கே அருள்புரிந்த பாலசித்தர் எழுந்தருளிய தலம் - மணக்கோலத்தில் முருகன் காட்சி தரும் மலை - மயிலையே பெயராகக் கொண்ட ஒரே மலை - அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிய திருத்தலம் - தொன்மை வாய்ந்த பொம்மையபுர திருமடம் விளங்கும் தலம் எனப் பல்வேறு பெருமைகளை உடையது மயிலம் திருக்கோயில்.

இந்த மயில மலை உருவானதும், அதில் முருகன் மணக்கோலத்தில் நிரந்தரமாகக் குடிகொண்டதும் கூட ஒரு சுவையான வரலாறுதான்.

மலையின் கதை

முருகனோடு போர் செய்து முடிவில் முருகப் பெருமானின் பேருருவைக் கண்ட சூரபதுமன் நல்லறிவு பெறுகிறான். முருகனைப் புகழ்ந்து பாடுகிறான். தான் செய்த தவறுகளை எல்லாம் மன்னித்து, தன்னையே மயில் வாகனமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என வரம்வேண்டி நிற்கிறான், சூரபதுமன்.

அவனது வேண்டுகோளை ஏற்ற முருகன், அதற்குரிய வழியையும் கூறுகிறார். தமிழ்நாட்டில் உள்ள, வராக நதியின் வடக்குக் கரையில், மயில் வடிவம் கொண்ட மலையாக நின்று, தவம் செய்யும்படியும், அவ்வாறு செய்த பின்பு அவனது விருப்பம் நிறைவேறும் என்றும், முருகன் கூறுகிறான். இதன்படியே, சூரபதுமன் மயில் வடிவ மலையாக அங்கே நின்று தவம் செய்து, வரம் பெற்ற தலமே மயிலம் எனும் மயூராசலம். இதுவே மயில மலை உருவான கதை.

பாலசித்தர்

சிவபெருமான் சிவகணத் தலைவர்களுள் ஒருவராகிய சங்குகன்னரை அழைத்து வீரசைவ நெறி தழைத்தோங்கவும் சித்தர் முதலானோர் வேண்டிய கொள்கைத் தெளிவுகளையெல்லாம் விளங்கச் செய்யவும் தென்னாட்டில் பிறக்க எனப் பணித்தான். அவ்வகையில் பூமியில் அவதரித்த பின்பு வேத சிவ ஆகமங்களை விளக்கி, சைவத்தை வளரச் செய்து, பல சித்தர்களுக்கும் அருள் செய்ய வேண்டும் என்றும், அவ்வாறு செய்து வரும்போது, முருகனுடன் போர் செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அந்த சமயத்தில் முக்தி கிடைக்கும் என்றும் அருள்பாலிக்கிறான் இறைவன்.

அவ்வாறே, சங்குகன்னர், மயில மலைக்கு கிழக்கே உள்ள கடலிலே, இளம் பாலகனாக அவதரிக்கிறார். அங்கிருந்து மயில மலைக்கு வந்து முருகனை நினைத்து கடும் தவம் செய்கிறார். ஆனால், முருகனோ பாலசித்தர் மீதுள்ள கோபத்தால் காட்சித் தர மறுக்கிறார்.

முருகனுடன் போர்

முருகனின் துணைவியான வள்ளி - தெய்வானை இருவரும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும். முருகன் அவற்றை ஏற்க மறுக்கிறார். முடிவில் தங்கள் சொல்லுக்கு மதிப்பில்லாத நிலையில், தேவியர் இருவரும் முருகன்மீது கோபம் கொண்டு மயில மலையில் உள்ள பாலசித்தரின் ஆசிரமத்தில் வந்து சேர்கின்றனர்.

தேவியர் இருவரையும் காணாத முருகன், அவர்களைத் தேடி வேடன் உருவில் மயில மலைக்கு வருகிறார். வேடனைக் கண்ட பாலசித்தர் வந்துள்ளது யாரென அறியாமல், அந்த வேடனுடன் போர் செய்கிறார். கடுமையான யுத்தத்திற்குப் பிறகு முருகன் தன் வேடத்தைக் களைந்து சுய உருவைக் காட்டுகிறார்.

உண்மையை உணர்ந்த பாலசித்தர், முருகனை வணங்கி மகிழ்ந்து, ஒரு வரம் தருமாறு வேண்டுகிறார். இந்த மயில மலை மீது திருமணக் கோலத்தில் வள்ளி - தெய்வானையுடன் நிரந்தரமாகக் காட்சி தந்தருள வேண்டுகிறார், பாலசித்தர்.

பக்தர்களுக்கு மனம் இரங்கும் முருகப்பெருமான் அவ்வாறே மணக்கோலத்தில் கிழக்கு திசையை நோக்கியவராக இன்முகத்துடன் காட்சி தருகிறார். இதுவே முருகன் மலையில் தங்கிய வரலாறு. இனி இங்குள்ள திருமடத்தின் வரலாற்றைப் பார்ப்போமா?

பாலசித்தரது அருளால் அம்மவை அம்மாள் திருவயிற்றில் அவதரித்த சித்தர் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய தேசிகர். இவரே இம்மலையில் உள்ள தொன்மை வாய்ந்த பொம்மையபுர திருமடத்தினை நிறுவியவர். இவரின் பாரம்பரியத்தின் பத்தொன்பதாவது பட்டத்தில் இருப்பவர்தான் தற்போதுள்ள ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள். இனி மயிலைமலைக்குச் செல்வோமே.

அமைவிடம்

சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் சென்னையில் இருந்து தெற்கே 122 கி.மீட்டர் தொலைவில் உள்ள நகரம் திண்டிவனம். இங்கிருந்து தென்கிழக்கே சுமார் 10 கி.மீட்டர் தொலைவில் உள்ள இடம் மயிலம்.

திண்டிவனத்தில் இருந்து மயிலம் வழியாக புதுச்சேரி செல்லும் பேருந்துகள் நிறைய உண்டு. திண்டிவனத்தில் இருந்து கூட்டேரிப்பட்டு கூட்டுச்சாலையில் இறங்கி, வேறு பேருந்து மூலமாகவும் மயிலம் செல்ல முடியும். சொந்த வண்டி உள்ளவர்கள் வெகு எளிதாகச் செல்ல சாலை வசதி உண்டு.

மயிலத்தில் அமைந்துள்ள மயில மலை, மயில் உருவை நினைவுபடுத்தும் வகையில், எழிலுடன் காட்சி தருகிறது. இம்மலை மீது குடி கொண்டிருப்பவன்தான் மயிலம் முருகன். சிறிய மலைதான். ஆனால் இதன் மகத்துவம் பெரிது.

மலை அடிவாரத்தில் அழகிய தெப்பக்குளம், அதன் அருகே அரசடி விநாயகர் ஆலயம். இங்குதான் முடி காணிக்கை, காது குத்துதல் ஆகியவை நடைபெறுகின்றன. மலைமேல் காது குத்தவும் வசதி உண்டு.

மலை ஏற அழகிய கருங்கல் படிக்கட்டுகள், இடையிடையே இளைப்பாற மண்டபங்கள் உள்ளன. மலை ஏற முடியாதவர்கள் வாகனங்களில் செல்லவும் மலைப்பாதை உண்டு.

மலைக்கோயில்

மலை ஏறியதும், கிழக்கு நோக்கிய ராஜகோபுரம் எழிலுடன் நிற்பதை அழகுறக் காண முடிகிறது. இது எப்போதும் மூடிய நிலையிலேயே

உள்ளது என்றாலும், ஆண்டுக்கு இருமுறை திறக்கப்படுகிறது. மார்கழி மாதத் திருவாதிரை நாளில் ஆருத்திரா தரிசனத்தன்றும், ஆனித் திருமஞ்சன திருவிழாவின் போதும் இக்கோபுர வாசல் திறந்திருக்கும்.

சந்நிதி செல்ல தெற்கு வாசல் வழியாகத்தான் உள்ளே செல்ல வேண்டும். இதன் எதிரே திருமடம் உள்ளது. தெற்கு வாசல் உள்ளே நுழைந்ததும் விநாயகர் சந்நிதி வருகிறது. அதையொட்டி ஆதிகுரு முதல்வராகிய பாலசித்தர் சிவலிங்க ஐக்கியமான ஜீவ சமாதி உள்ளது.

இன்னும் சற்று தள்ளிச் சென்றால், பாலசித்தருக்கும் சூரபதுமனுக்கும் காட்சி தந்த முருகப் பெருமான் வள்ளி தெய்வானையுடன் திருமணக் கோலத்தில் அழகுமிளிரக் காட்சி தருகிறார்.

இங்குள்ள மலையில் வடதலை உள்ளது போலவே, இங்கேயுள்ள மயிலும் வடக்கு நோக்கியே நிற்கின்றது. வடக்கு திசை நோக்கும் மயிலை, அசுர மயில் என்று கூறுவர். இங்கே சூரபதமன் மயிலாகி நிற்பதை, இது நினைவுபடுத்தும் வகையில் உளளது.

கருவறைக் கோபுரத்தில் 16 பெயர்களைக் குறிக்கும் 16 வித கோணங்களில் முருகன் காட்சிதர, இடையிடையே, சித்தர்களின் சிலைகளும் இடம் பெற்றுள்ளன. மேலும், திருமண மண்டபத்தின் மேல்புறத்தில் அனைத்து ராசிகள் குறித்த சிற்பங்களும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

முருகனின் இடப்புறம் உள்ள மண்டபத்தில் உற்சவ மூர்த்திகள் அணிவகுப்பைக் காண முடிகிறது. இதில் ஒரு உற்சவர் புதுச்சேரியில் நடக்கும் மாசி மகத்திற்கும், மற்றொருவர் மலைமீது நடக்கும் விழாக்களுக்கும் காட்சி தருவார்கள்.

காலை ஆறுமணிக்கு ஆதிகுருமுதல்வர் சந்நிதி வழிபாட்டிற்குப் பிறகு, பிற சந்நதிகளின் வழிபாடு தொடங்குகின்றது.

தங்கமயில்

மலையில் குறிப்பிடத்தக்க மற்றொரு அம்சம், தங்க மயில் வாகனம், தைப்பூசத்தன்று, பங்குனி பிரம்மோற்சவத்தின் ஐந்தாம் நாள் விழாவின்போது தங்க மயில்மீது முருகன் பவனி வரும் காட்சி காணக்கிடைக்காத ஒன்று என்றால், அது மிகையல்ல. ஆனால் அன்றைய தினத்தில் காண வேண்டுமானால் இரவு பதினோரு மணி வரை காத்திருக்கத்தான் வேண்டும்.

"அயில் வேலன் மயிலம் வரும் மயில் வாகனத்தானுடன் அம்புலி ஆடவாவே..." என்கிறார், சிதம்பர முனிவர்.

"மலைகொண்ட வேடுவர் கானூ
டேபோய்
குறமங்கை யாளுடனேமா லாயே
மயல்கொண்டு லாயவள் தாள்மீ தேவீழ்
குமரேசா
மதிமிஞ்சு போதக வேலா ஆளா
மகிழ்சம்பு வேதொழு பாதா நாதா
மயிலந்தண் மாமலை வாழ்வே வானோர்
பொருமாளே"

என்று மயிலம் குன்றில் எழுந்தருளிய முருகப்பெருமானைப் போற்றி ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அருளிய திருப்புகழில் பாடியுள்ளார்.

திருமடம்

இக்கோயிலை நிர்வகித்து வருவது பொம்மையபுர ஆதினத் திருமடம் என்பது குறிப்பிடத்தக்கது. இத்திருமடத்தின் ஆதிசிவஞானியாகிய ஸ்ரீலஸ்ரீசிவஞான பாலய சுவாமிகளின் முதற் சீடர் முதன்மைச்சீடர் கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீசிவப்பிரகாச சுவாமிகள். இவர் 34 நூல்களைப் பாடியவர். இவர்



தம் ஞானகுருவின்மேல் பாடிய நூல்கள் ஐந்திலும் மயிலம் திருத்தலம் திருக்கோயில் பற்றிய வரலாறுகள் பரவலாகக் காணப்படுகின்றன. தொன்மைவாய்ந்த இம்மடம் சமயத் தொண்டோடு சமூகத் தொண்டிற்காக 1938-ஆம் ஆண்டிலேயே தமிழ்க்கல்லூரி ஒன்றை நிறுவி, அதை இன்றுவரை சிறப்புற நடத்தி வருகின்றது.

விழாக்கள்

தைப்பூச நன்னாளில் 1008 சங்கு அபிஷேகம், பங்குனி மாத பூரத்தில் தேரோட்டம், ஆனி மாத திருவாதிரை நாளன்று பாலசித்தரின் மகா குருபூஜை போன்றவை குறிப்பிடத்தக்க கோயில் நிகழ்ச்சிகள்.

திருமணப்பேறு, குழந்தைப் பேறு வேண்டுவோர் இங்குள்ள வீரபாகுவை செவ்வாய்தோறும் வணங்கி வழிபட்டால் காரியம் கைகூடும் என்பது இன்றளவிலும் நிலவி வரும் நம்பிக்கை.

இக்கோயிலின் சந்நிதி வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும், பவுர்ணமி, அமாவாசை, சஷ்டி ஆகிய விரத நாட்களிலும், முழு நாளும் திறந்திருக்கும்.

மயிலத்தை தரிசிப்பவர்கள் இதன் அருகே உள்ள திருவக்கரை வக்கிரகாளி அம்மனையும் தரிசிக்கலாம். அதோடு திருவக்கரையிலுள்ள அபூர்வக் கல் மரங்களையும் கண்டு மகிழலாம்.

- படமும், படைப்பும்
பனையபுரம் அதியமான்





சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் : த. பிச்சாண்டி, இ.ஆ.ப. சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் இந்து சமய அறநிலையத் துறை, சென்னை - 600 034. தொலைபேசி எண் : 28334811 / 12 / 13
ஆசிரியர் (கூ.பொ) : ம. தேவேந்திரன், பி.எஸ்ஸி., பி.எல்., துணை ஆணையர்
அச்சிடுவோர் : சக்தி ஸ்கேனர்ஸ் பிரைவேட் லிட்., சென்னை - 86. தொலைபேசி : 23450920 / 28117575

உ

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்



திருத்தணி 2007 - 2008ம் ஆண்டு
திருப்புகழ் திருப்படித் திருவிழா

திருமுருகன் அருள்பாலிக்கும் ஆறுபடை வீடுகளில் ஐந்தாம் படைவீடான இத்திருத்தணிகையம்பதியில் "திருப்புகழ் ஓதும் அடியார்கள்" திருப்படிகள் தோறும் தேவாரம், திருப்புகழ், கந்தர் அநுபூதி பாடல்களை இசையுடன் பாடிச்செல்லும் "திருப்படித் திருவிழா" வழிபாடு 31.12.2007 திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் சரவணப்பொய்கை (திருக்குளம்) முகப்பு மண்டபத்திலிருந்து தொடங்கப்படவுள்ளது.

31.12.2007	காலை 10.00 மணி	மலைக்கோயிலில் வெள்ளித்தேரில் சுவாமி உலா
31.12.2007	இரவு 12.01 மணி	ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு சிறப்பு தீபாராதனை
01.01.2008	இரவு 7.30 மணி	தங்கத்தேரில் அருள்மிகு வள்ளி, அருள்மிகு தெய்வானை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி உலா வரும் தெய்வீக திருக்காட்சி

பக்தர்கள் மூலவரை விரைவில் சென்று தரிசிக்க இலவசமாகவும் ரூ. 100/ மற்றும் ரூ. 15/ சிறப்பு வழி தரிசன வழிகளும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இத்திருக்கோயிலில் எந்த இடத்திலிருந்தும் உற்சவ மூர்த்தியினை தரிசிக்க சிறப்பு தொலைக்காட்சி ஒளிபரப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டும், மேலும் அனைத்து வழித்தடங்களிலிருந்தும் சிறப்பு விழா பேருந்து மற்றும் சிறப்பு இரயில்களை இயக்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பக்தர்கள் தங்குவதற்கு குளிர்சாதனக் குடில்கள், குடில்கள் மற்றும் அறைகள் உள்ளன. மலைக்கோயிலுக்கு சென்றுவர தணிகை இல்லக் குடில்களிலிருந்து பேருந்துகள் வசதி உள்ளது. பக்தர்கள் தலைமுடிக் காணிக்கைகளை திருக்கோயிலால் ஏற்படுத்தப்பட்டுள்ள தலைமுடி நிலையங்களில் மட்டும் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு திருத்தணிகை திருமுருகன் திருவருள் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

ஆர். சுதர்சன்
இணை ஆணையர் / செயல் அலுவலர்

மு. ஈஸ்வரப்பன்
அறங்காவலர் குழுத்தலைவர்

அறங்காவலர்கள்

கே. பாலகிருஷ்ணன் **ஏ.வி. சக்கரப்பன்** **ஜி. உஷா** **மு. நாகன்**

பதிவு எண் : TN/PMG/(CCR)/707/06-08/WPP No.451/[illegible]-08

999.9 pure gold

100% trust

Presenting 999.9 pure Gold Coins from Bank of India at competitive rates

Packed in Certicard form
Tamperproof
Available in 5 gms, 8 gms, 20 gms and 50 gms

Special loans for women at attractive rates for purchase of gold coins and jewellery.

*Conditions apply.

बैंक ऑफ़ इंडिया
Bank of India

Relationships beyond banking

Visit us at www.bankofindia.co.in